# அரசு ஊழியர்


பிப்ரவரி 2021

மலர் : 42 இதழ் : 2

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்திற்காக
அச்சிட்டு வெளியிடுபவர் : மு.அன்பரசு
ஆசிரியர் : ஆ.செல்வம்

ஆசிரியர் குழு
மு.அன்பரசு, மொ.ஞானத்தம்பி, மு.பாஸ்கரன்,
இரா.ந.நம்பிராஜன், தெ.வாசுகி

முகவரி : பழைய எண். 48
புதிய எண் 46, தேரடித் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.
e-mail : arasuoozhiyar@gmail.com

*அச்சகம்: சென்னை ஆப்செட் பிரிண்டர்ஸ்,
19/1 & 21/2, கிட்டாபாத் கான் பகதூர் தெரு,
எல்லீஸ் ரோடு, அண்ணாசாலை,
சென்னை - 600 002.*

*ஆண்டுச் சந்தா : ரூ. 100 தனி இதழ் ரூ. 10*


## சூடா ஒரு கோப்பை சூப்

## பறக்கத் துடி!

இன்னுமா நீ பறக்கவில்லை?
விரித்த சிறகுகளும் தனித்த முன்னுடலும்
தொட்டும் தொடாமலும் நிற்கும் கால்களுமாய்
உன்னை வடித்திருக்கும் அந்தச்
சிற்பியின் அந்தரங்கம்
இன்னுமா உனக்கு எட்டவில்லை?

அகன்ற முற்றத்தில்
காலம் காலமாய் வந்திறங்கி
சோபைகளை வாரியிரைக்கும்
புறாக்களின் சுதந்திரத்தைக்
கண்ணாரக் கண்ட பின்னுமா
பாதம் உயர்த்தி பறக்கத் தயங்கி
நின்று கொண்டிருக்கிறாய் நீ?

- சுந்தர ராமசாமி




## சென்னையில் ஒளிதரும் நல்லதொரு தொடக்கம் - தொடர்ந்திட சென்னையில் ஒன்றுகூடி

## முழங்குவோம் முற்றுகையிடுவோம்!

*சிறை நிரப்பும் போராட்டம் அறிவித்து, போராட்ட ஆயத்த மாநாடு முடித்து, போராட்டத்துக்காக நாம் நம்மை தயார்படுத்திக்கொண்டிருக்கும் வேளையில் தமிழக முதல்வரிடம் இருந்து நமக்கு ஒரு நல்ல செய்தி வந்துள்ளது. 2019ஆம் ஆண்டு போராட்டத்தில் ஈடுபட்டு ஒழுங்கு நடவடிக்கை குற்றக்குறிப்பாணைகளுக்கு உள்ளாகி கடந்த இரண்டு ஆண்டுகளாக மன உளைச்சலுக்கு ஆளாகியிருந்த சுமார் 8000 அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் மீதான நடவடிக்கைகள் கைவிடப்படுவதாக அறிவிப்பு வந்திருக்கிறது. இது நம்முடைய போராட்டம் சரியான காலத்தில் சரியான நேரத்தில் திட்டமிடப்பட்டு சரியான பாதையில் சென்றுகொண்டிருப்பதற்கான முதல் அடையாளமாகும். இந்த கட்டுரை எழுதப்பட்டுக் கொண்டிருக்கும் வேளையில் முதல் வெற்றிச் செய்தி நல்லதொரு ஆரம்பமாக வந்து சேர்ந்திருக்கிறது. இந்த இதழ் உங்கள் கைகளில் கிடைத்திருக்கும் இந்நேரத்தில் இன்னும் பல ஆக்கபூர்வமான விளைவுகள் நிகழ்ந்திருக்கும்.*

*மத்திய அரசு, ஏழாவது ஊதியக்குழுவின் பரிந்துரைகளை ஏற்று தனது ஊழியர்களுக்கு ஊதிய மாற்றம் வழங்கிய பின்னரும் தமிழக அரசு ஊதியக்குழுவை அமைத்து உடனடியாக ஊதியமாற்றம் ஏற்படுத்திடாமல் காலம் தாழ்த்திய நிலையில் அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் ஊதிய மாற்ற பரிந்துரைகளை அமல் படுத்த போராட்டம் நடத்தினார்கள். அப்போதும் அரசு ஊழியர்களுக்கு ஊதிய மாற்றம் ஏற்படுத்தாமல் அரசு ஊழியர்கள் போராட்டக்களம் காண வேண்டிய நிலையை தமிழக அரசு ஏற்படுத்தியது. இந்தப்போராட்டம் உயர்நீதிமன்றத்தின் கவனத்திற்கு சென்ற பின் மதுரை உயர்நீதிமன்றம் அரசு ஊழியர்கள் ஆசிரியர்களின் நியாயமான கோரிக்கையான ஊதிய உயர்வை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்று அரசை கண்டிப்புடன் நிர்ப்பந்தித்ததன் பேரில் ஊதிய மாற்றமானது 21 மாத கால இடைவெளிக்குப் பின்னர் வழங்கப்பட்டது. மேலும் அந்த 21 மாத கால ஊதிய மாற்ற நிலுவைத் தொகை அரசால் மறுக்கப்பட்டு*

அரசு ஊழியர்கள் ஆசிரியர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டது.

21 மாத ஊதிய மாற்ற நிலுவைத் தொகை குறித்தும் மேலும் அரசு ஊழியர்கள் ஆசிரியர்களின் முக்கிய கோரிக்கைகளான புதிய ஓய்வூதிய திட்டத்தை ரத்து செய்திட வேண்டும் ஊதிய மாற்றத்தின் போது ஏற்பட்ட ஊதிய முரண்பாடுகள் களையப்பட வேண்டும் சிறப்பு காலமுறை ஊதியம் மற்றும் தொகுப்பூதியத்தில் பணியாற்றும் ஊழியர்களுக்கு முறையான ஊதியம் வழங்க வேண்டும், மற்றும் பணியாளர் பகுப்பாய்வுக் குழுவினை அமைத்து வெளியிடப்பட்ட அரசாணையை ரத்து செய்ய வேண்டும் உள்ளிட்ட பல கோரிக்கைகளை பலமுறை முறையீடுகள் மூலமாகவும், பிரதிநிதித்துவங்கள் வாயிலாகவும் முறையிட எத்தனித்தும் அவை அனைத்தும் பலனில்லாமல் போனதால் அரசாங்கம் அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களை நேரடியாக அழைத்துப்பேசி தீர்வு காண வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டது. ஆனால் அரசு ஜாக்டோ ஜியோ ஒருங்கிணைப்பாளர்களையோ, போராடும் சங்க நிர்வாகிகளையோ அழைத்துப் பேசாமல் அடக்குமுறைகளை ஏவி விட்டு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் பலபேரை கைது, துறைவாரி விசாரணை, பணியிட மாற்றம் போன்ற நடவடிக்கை வாயிலாக போராட்டத்தை சிதைக்கப்பார்த்தது. போராட்டத்தின் உச்சமாக மாண்புமிகு தமிழக முதல்வர் அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் மக்கள் மற்றும் மாணவர்கள் நலன் கருதி போராட்டத்தை கைவிட்டு பணிக்கு திரும்ப வேண்டுமென கேட்டுக் கொண்டதன் பேரில் மாண்புமிகு தமிழக முதல்வர் ஜாக்டோ ஜியோ ஒருங்கிணைப்பாளர்களை அழைத்துப் பேசி தீர்வு காண்பார் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் 29.01.2019ஆம் தேதியோடு போராட்டத்தை முடித்துக் கொண்டு அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் பணிக்கு திரும்பினோம். நாம் பணிக்குத் திரும்பும் முன் அரசிடம் போராட்டத்தின் போது அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் மீது போடப்பட்ட வழக்குகள், துறைவாரி நடவடிக்கைகள், குற்றக் குறிப்பாணைகள், பணிமாற்ற உத்தரவுகள் போன்றவற்றை திரும்பப் பெற வேண்டும் என்ற கோரிக்கையை வைத்து 30.01.2019ஆம் தேதி பணிக்குத் திரும்பினோம்.

ஆனால் மாண்புமிகு முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் பணிக்குத் திரும்பிய பின்னர் நமது எந்தக் கோரிக்கையையும் அழைத்துப்பேசி தீர்க்க முன் வராததோடு மட்டுமல்ல போராட்ட காலத்தில் எடுக்கப்பட்ட துறைவாரி நடவடிக்கைகள் குற்ற குறிப்பாணை நடவடிக்கைகள் பணியிட மாற்ற நடவடிக்கைகள் போன்றவற்றைக்கூட திரும்பப் பெற முன்வரவில்லை. ஜாக்டோ ஜியோ ஒருங்கிணைப்பாளர்கள் பலமுறை அரசாங்கத்திடம் கோரிக்கைகள் வைத்தும் அழைத்துப்பேச வலியுறுத்தியும் அரசாங்கம் ஜாக்டோ ஜியோ பிரதிநிதிகளை அழைத்துப் பேசாததோடு அந்த நடவடிக்கைகளை, விசாரணைகளை தீவிரப்படுத்தியது.

பலமுறை முதல்வரையோ, சம்பந்தப்பட்ட துறை அமைச்சர்களையோ ஜாக்டோ ஜியோ ஒருங்கிணைப்பாளர்கள் சந்திக்க முயற்சித்து அது தோல்வியில் முடிந்திட்ட நிலையில் அரசின் கவனத்தை ஈர்ப்பதற்கும் ஊழியர்களின் கோரிக்கைகளை உரிமைகளைக் காப்பதற்கும் மறியல் செய்து சிறை நிரப்பும் போராட்டத்தை வேறு வழியின்றி கையிலெடுக்க வேண்டிய அவசியத்தை இந்த அரசு ஏற்படுத்திவிட்டது.

இப்போது பிப்ரவரி 2 முதல் சிறை நிரப்பும் போராட்டத்தை அறிவித்த நிலையில் தமிழக முதல்வர் 2019ஆம் ஆண்டு நடைபெற்ற போராட்டத்தில் கலந்து கொள்ளாத எவ்வித குற்றக் குறிப்பாணைகளுக்கும் ஆளாகாத லெட்டர்பேடு சங்கங்களின் நிர்வாகிகள் சிலர் பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை அமைச்சரை நேரில் சந்தித்து கோரிக்கை வைத்ததன் பேரில் போராட்ட காலத்தில் தொடரப்பட்ட அனைத்து ஒழுங்கு நடவடிக்கைகளையும் குற்றவியல் நடவடிக்கைகளையும் கைவிடுவதாக அறிவித்துள்ளார்.

கடந்த இரண்டு ஆண்டுகளாக பலமுறை பல்வேறு கோரிக்கை மனுக்களை அளித்து முதல்வரையும் சம்பந்தப்பட்ட துறை அமைச்சரையும் பார்க்க மேற்கொண்ட அனைத்து முயற்சிகளும் தோற்றுப்போன நிலையில் சிறைசென்றாவது அரசின் கவனத்தை ஈர்த்து அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் நியாயமான கோரிக்கைளை முதல்வர் மற்றும் துறை அமைச்சர்களை கேட்க வைத்துவிட வேண்டும் அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் நியாயமான உரிமைகளை மீட்டிட வேண்டும் என்ற தீர்மானமான செயலில் இறங்கியுள்ள நிலையில் மறப்போம் மன்னிப்போம் என்ற கருத்தின் அடிப்படையில் போராட்ட காலத்தில் அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் மீது ஏவப்பட்ட துறை மற்றும் குற்ற நடவடிக்கைகளை மட்டும் தமிழக முதல்வர் திரும்பப் பெற்றுள்ளது அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் நியாயமான கோரிக்கைகளை புறந்தள்ளிவிட்டு செல்வதாகும்.

பழைய ஓய்வூதியத் திட்டம் தொடர்வதற்கான வழிவகைகளை கண்டறிவதற்காக அமைக்கப்பட்ட குழுவின் அறிக்கை முடிவுகளைப் பற்றி எதுவும் சொல்லாமல், அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் முன் வைத்துள்ள முக்கிய கோரிக்கைகள் குறித்து எதுவும் விவாதிக்காமல் அது குறித்து அரசின் நிலைப்பாட்டை ஜாக்டோ ஜியோ ஒருங்கிணைப் பாளர்களை அழைத்துப் பேசி தீர்வு காணாமல் போராட்ட காலத்தில் போராட்டத்தில் ஈடுபட்ட அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் மீதான குற்றக் குறிப்பாணைகளை மட்டும் ரத்து செய்வதாக அறிவித்திருப்பது இரண்டு ஆண்டுகள் காத்திருந்து அரசின் கவனத்தை ஈர்க்க அறிவிக்கப்பட்டுள்ள நமது போராட்டத்திற்கு கிடைத்த முதல் வெற்றியாகும். அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் நலனுக்காக எந்தப் போராட்டத்திலும் ஈடுபடாத சில லெட்டர் பேடு சங்க நிர்வாகிகள் கொடுத்த கோரிக்கைகளை ஏற்று அவற்றை ரத்து செய்வதாக முதல்வர் அறிவித்திருப்பது ஜாக்டோ ஜியோ போராட்டக் குழுவின் முன்னெடுத்துள்ள போராட்டத்தின் முக்கியத்துவத்தை அரசுக்கு உணர்த்தியுள்ளது ஒரு நல்ல ஆரம்பமே.

ஆனாலும், இந்த ஒரு அறிவிப்பினைத் தொடர்ந்து மாண்புமிகு தமிழக முதல்வரும், மாண்புமிகு துறை அமைச்சர்களும் ஜாக்டோ ஜியோ போராட்டக் குழுவினருடன் பேச்சுவார்த்தை நடத்தி அரசு ஊழியர்கள் ஆசிரியர்களின் நியாயமான நிலுவை கோரிக்கைகளை கேட்டு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வரை அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் உறுதி பூண்டுள்ள சிறை நிரப்பும் போராட்டம் நிகழ்ந்து கொண்டே இருக்கும்.

மறப்போம் மன்னிப்போம் என்ற உயரிய கருத்தை மனதில் கொண்டு அரசு ஊழியர்கள் மீதான ஒழுங்கு மற்றும் குற்ற நடவடிக்கைகளை கைவிட்டுள்ள தமிழக முதல்வர் அவர்கள் அதே மறப்போம் மன்னிப்போம் என்ற உயரிய கோட்பாட்டை மனதில் கொண்டு அரசு ஊழியர்கள் ஆசிரியர்களின் நிலுவை கோரிக்கைகளான 21 மாத ஊதிய மாற்ற நிலுவைத் தொகை, புதிய ஓய்வூதிய திட்டத்தை ரத்து செய்தல், ஊதிய மாற்றத்தின் போது ஏற்பட்ட ஊதிய முரண்பாடுகள் களையப்படுதல், சிறப்பு காலமுறை ஊதியம் மற்றும் தொகுப்பூதியத் தில் பணியாற்றும் ஊழியர்களுக்கு முறையான ஊதியம் வழங்க வேண்டும் போன்ற கோரிக்கை களின் பேரில் பேச்சுவார்த்தை மூலம் உரிய தீர்வைக் காண முன் வர வேண்டும். மாண்புமிகு முதல்வரோ அல்லது மாண்புமிகு துறை அமைச்சர்களோ நமது கோரிக்கைகளின் பேரில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள இந்த தேர்தல் காலத்தில் அரசு ஊழியர்களாகிய நாம் உரிய அழுத்தத்தை அரசுக்கு கொடுத்து நம்முடைய உரிமைகளை திரும்பப் பெற முழுமூச்சுடன் முயற்சிக்க வேண்டும்.

இது தேர்தல் காலம். நாம் நம்முடைய உரிமைகளுக்காக தொடர்ந்து போராடிக் கொண்டிருக்கிறோம். தேர்தல் காலத்தில் அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் போராட்டத்தை கையில் எடுத்தால் அது தன்னுடைய அரசுக்கு ஆபத்தாய் போய் முடியும் என்பதை அறியாதவரல்ல முதல்வர். அதனால் தான் அவர் எலும்புத்துண்டை மட்டும் வீசிவிட்டு நம்முடைய பிரச்னைகளை ஏப்பம் விட்டுவிட நினைக்கிறார். நம்முடைய போராட்டம் தீவிரம் அடைய அடைய மாடத்திலிருக்கும் மந்திரிகளும், மூலஸ்தானத்தில் இருக்கும் முதல்வரும் நம்மைக்காண வெளியே வந்தே தீர வேண்டும்.

எனவே பிப்ரவரி 19ஆம் தேதி தமிழகத்தில் உள்ள அனைத்து அரசு ஊழியர்களும் தலைநகரத்தில் ஒன்றுகூடி பெருந்திரள் முறையீட்டை முதல்வரை நேரில் சந்தித்துக் கொடுக்க ஆயத்தமாவோம். நம்முடைய பெருந்திரள் முறையீட்டை முதல்வர் நேரில் பெற மறுதலிப்பாரேயானால் கோட்டையை முற்றுகையிட்டு முதல்வர் நம்மை அழைத்துப் பேச நிர்ப்பந்திப்போம். நம்முடைய உறுதியான மனவலிமை மிக்க போராட்டங்களாலும் போர்க்குணத்தாலும் மட்டுமே நாம் நம்முடைய உரிமைகளை பெறவும் தக்கவைக்கவும் செய்துள்ளோம் என்பது நமது இயக்க வரலாறு. 2003 அரசு ஊழியர் ஆசிரியர் போராட்டமும் அதன்பின் நிகழ்ந்த ஆட்சி மாற்றமும் ஆட்சியாளர்களுக்கு மட்டுமல்ல நமக்கும் பல படிப்பினைகளை கொடுத்துள்ளதை நாம் மறந்துவிடக் கூடாது. எவ்வளவுக்கு எவ்வளவு தீவிரமாக நாம் போராடுகிறோமோ அந்த அளவுக்கு நம்முடைய உரிமைகளை வென்றெடுக்கலாம் என்பதே அந்தப் போராட்டத்தின் அடிநாதம். இப்போது நாம் நம் உரிமைகளுக்காக வெகுண்டெழாமல் விட்டுவிட்டால் இனிமேல் நாம் இந்த அரசாங்கத்தில் மட்டுமல்ல எந்த அரசாங்கத்திலும் அடிமைச் சேவகம் செய்ய வேண்டிய நிலை எழுந்துவிடும் என்பதை உணர்ந்து அரசு ஊழியர்கள் அனைவரும் சென்னை நோக்கி பிப்ரவரி 19ஆம் தேதி அணிதிரள்வோம். உண்மையான, உக்கிரமான, உன்னதமான போராட்டங்கள் என்றும் தோற்ற தில்லை என்ற வரலாற்றுப் படிப்பினைகளோடு அடுத்தடுத்த வெற்றிப்படிகளை எட்டுவோம்.

**வலியுடன் மட்டுமல்ல**
**உளியுடனும் வாருங்கள்**
**நம்முடைய உரிமைகளை**
**நாமே செதுக்குவோம்!** ■

# உரிமைக்குரல் முழங்குவோம்,
# முதல்வர் நம்மை அழைக்க மறுத்து உதாசீனப்படுத்தினால்...
# கோட்டையை முற்றுகையிட்டு முடக்குவோம்!

அன்பிற்கினிய தோழர்களே வணக்கம்!

அரசு ஊழியர்கள், நிலுவையில் உள்ள தங்களது கோரிக்கைகளை முதல்வரோ, அமைச்சர்களோ அழைத்துப் பேசி தீர்க்க வேண்டும் என்று தமிழக அரசிடம் கடந்த நான்கு ஆண்டுகளாக வலியுறுத்தி அதன் பேரில் அரசு கவனம் செலுத்தாததினால் மறியல் செய்து சிறை நிரப்பும் போராட்டத்தை நடத்த வேண்டிய நிர்ப்பந்தம் எழுந்தது. கடந்த 2019 ஜனவரியில் நமது கோரிக்கைகளுக்காக போராட்டம் மேற்கொண்ட போது ``போராட்டத்தை விலக்கிக் கொண்டு வாருங்கள் பேசலாம்.`` என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூறியதன் பேரில் போராட்டத்தை முடித்துக்கொண்டு பேச்சு வார்த்தைக்கு கூப்பிடுவார் முதல்வர் என இரண்டு ஆண்டுகள் காத்திருந்தது தான் மிச்சம். மேலும் 2019 ஜனவரி ஜாக்டோ-ஜியோ போராட்டத்தில் ஈடுபட்டு குற்றக் குறிப்பாணைகள் ஒழுங்கு நடவடிக்கைகள் வழங்கப்பட்ட, வழக்குகள் போடப்பட்ட, பணியிட மாறுதல் செய்யப்பட்ட அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் மீதான நடவடிக்கைகளை திரும்பப் பெற வேண்டும் என்ற கோரிக்கையைக்கூட அரசு பரிசீலிக்க தயாராக இல்லை என்பதும் இந்தப் போராட்டத்தை நாம் முன்னெடுத்தே தீர வேண்டிய அவசியத்தை ஏற்படுத்தியது.

இதற்கான போராட்ட ஆயத்த மாநாட்டை மதுரையில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் நடத்தியபோது திமுக, காங்கிரஸ், கம்யூனிஸ்ட் மற்றும் விடுதலை சிறுத்தைகள் ஆகிய கட்சிகளின் தலைவர்கள் ஆளும் அதிமுக ஆட்சியின் சர்வாதிகாரத் தனத்தை சுட்டிக் காட்டி அரசு ஊழியர்களை அதிமுக அரசு விலங்குகளைப் போல் நடத்தும் போக்கை மாற்றிக்கொண்டு அவர்களை அழைத்துப் பேசி அவர்களின் கோரிக்கைகளை கனிவுடன் பரிசீலித்து தீர்வு காண வேண்டும் என்று வலியுறுத்தினர். மேலும் திமுக கட்சியின் தலைவர் திரு மு.க.ஸ்டாலின், இந்த அரசு, அரசு ஊழியர்களை அழைத்து அவர்களின் நியாயமான கோரிக்கைகளை பேசித் தீர்க்காவிட்டால், தேர்தலில் திமுக வெற்றி பெற்று ஆட்சி அமைத்ததும் அரசு ஊழியர்களின் கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட்டு தீர்த்து வைக்கப்படும் என்ற வாக்குறுதி அளித்தார். எதிர்க்கட்சி தலைவர்களின் இந்த அறிவிப்புக்குப் பின்னர் அரசு ஊழியர்கள் போராட்டம் துவங்குவதற்கு முன்னதாக, அரசு ஊழியர்கள் - ஆசிரியர்கள் மீது போடப்பட்டிருந்த குற்றக் குறிப்பாணைகளையும், வழக்குகளையும் திரும்பப் பெறுவதாகவும் ஒழுங்கு நடவடிக்கைகளை கைவிடுவதாகவும் 2021 பிப்ரவரி 1ல் தமிழக அரசு,அறிவித்தது.

இது வரவேற்கத்தக்க நடவடிக்கையாக இருந்த போதிலும் பல லட்சக்கணக்கான அரசு ஊழியர்களின் வழ்வாதார கோரிக்கைகள் குறித்து அரசு ஊழியர்கள் - ஆசிரியர்களை பிரதிநிதித்துவப் படுத்தும் சங்கங்களின் தலைவர்களை அழைத்துப் பேசி தீர்வு காண முதல்வர் முன்வராததால் நாம் பிப்.2 முதல் தமிழ்நாடு முழுவதும், சொன்னபடி மறியல் போராட்டம் தொடங்கி நடத்தினோம். கைது ஆகி சிறை சென்றோம். காத்திருப்புப் போராட்டமும் நடத்தினோம். அனால் இந்த அரசு, அரசு ஊழியர்களின் இந்தப் போராட்டத்தை கண்டுகொள்ளாதது மட்டுமல்ல, நம்மை புழுக்களாக நினைத்து மிதித்துவிடத் துடிக்கிறது.

செல்வி ஜெயலலிதா 2003 இல் முதலமைச்சராக இருந்த போது நடைபெற்ற அரசு ஊழியர், ஆசிரியர் போராட்டங்களும், அதன் விளைவுகள் குறித்தும் ஆட்சிக்கட்டிலில் அமர்ந்திருப்பவர்கள் அவ்வளவு எளிதாக மறந்துவிட முடியாது. 2003இல் 1,86,000க்கும் மேலான அரசு ஊழியர்களை ஒரே அரசாணையில் டிஸ்மிஸ் செய்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதா, சட்டமன்ற தேர்தலுக்கு முன்னர், தனது ஆட்சிக்காலத்திலேயே அனைவரையும் மீண்டும் பணியில் அமர்த்தினார். சிறையில் அரசு ஊழியர்கள் - ஆசிரியர்கள் மாதக் கணக்கில் இருந்த காலத்தை பணிக்காலமாக வரன்முறை செய்து ஆணையிட்டார். வேலை நிறுத்த நாட்களுக்கு ஊதியம் வழங்கினார்.




ஆனாலும் அரசு ஊழியர்களுக்கு ஜெயலலிதா அம்மையார் மீது இருந்த கோபம் தீர வில்லை. அதனால் 2006ஆம் ஆண்டு

நடந்த தேர்தலில் அதிமுக அரசை வீட்டுக்கு அனுப்பும் உத்வேகத் துடன் பகை முடிக்கும் பணியில் இறங்கினர்அரசு ஊழியர்கள். அதனால் அரசு ஊழியர் சங்கம் எதிர்க்கட்சித் தலைவர்களை அழைத்து மதுரையில் ஒரு மாநாட்டை நடத்தியது. அந்த மாநாட்டின் மையக்குரல் அரசு ஊழியர் களை - ஆசிரியர்களை தமிழ்நாட்டு மக்களை துன்புறுத்தி வந்த அரசினை அகற்றுவதற்கான உறுதியை வெளிப்படுத்தியது. அரசு ஊழியர் சங்கத் தலைவர்கள் களத்தில் இறங்கினர். விளைவு ஆளுங்கட்சியான ஜெயலலிதா தலைமையிலான அரசு படுதோல்வியை சந்தித்தது. இது வரலாறு.

ஜெயலலிதாவின் மறைவிற்குப் பிறகு அமைந்த அதிமுக ஆட்சியில் கடந்த நான்கு ஆண்டுகளில் அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் கடுமையாக பழிவாங்கப்பட்டுள்ளனர். 5000க்கும் மேற்பட்ட அரசுஊழியர் ஆசிரியர்கள் ஆண்டு ஊதிய உயர்வு பெற முடியாமலும், பதவி உயர்வு பெற முடியாமலும், பணி ஓய்வு பெற்றும் பலன்கள் கிடைக்கப் பெறாமலும், தமிழக அரசு போட்ட பொய் வழக்குகளில் சிக்கி காவல் நிலையங்களுக் கும் நீதிமன்றங்களின் வாசல்களிலும் தவம் கிடக்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் நடத்திய சத்துணவு ஊழியர்களின் ஊதியம் பிடிக்கப்பட்டு பழிவாங்கப்பட்டுள்ளனர். ஆயிரக் கணக்கான அரசு ஊழியர்கள் - ஆசிரியர்கள் மீது போடப்பட்டுள்ள பொய்வழக்குகளை திரும்பப் பெற அரசு தயக்கம் காட்டி வந்தது. மத்திய அரசின் கைப்பாவையாக செயல்பட்டுவரும் தமிழ்நாடு அரசு, மத்திய அரசின் முடிவின்படி, தமிழ்நாடு அரசு ஊழியர் ஆசிரியர்களுக்கு மூன்று தவணை அகவிலைப்படியை, சரண்டரை முடக்கி வைத்துள்ளது. சுமார் 6000 கோடி ரூபாய் இதனால் ஊழியர்களுக்கு இழப்பு ஏற்பட்டுள்ளது, கொரோனா தடுப்புப் பணியில் ஈடுபட்டுள்ள முன் களப் பணியாளர்கள் இறந்துபோனால் அவர்கள் குடும்பத்தாருக்கு ரூ.25 லட்சம் இழப்பீடு வழங்கப்படும் என அறிவித்த தமிழக முதலமைச்சர் தனது வாக்குறுதியை காற்றில் பறக்கவிட்டது. இதனால் சுகாதாரத்துறை, காவல் துறை என பல்வேறு துறைகளில் பணியாற்றி பாதிக்கப்பட்டுள்ள மருத்துவர்கள், காவலர்கள், பல்வேறு துறை ஊழியர்கள் இந்த அரசின் மீது கடும் அதிருப்தியில் உள்ளனர்.

இந்நிலையில் அரசு ஊழியர் சங்கம் தொடர்ந்து அரசுடன் பேச்சுவார்த்தை நடத்த முயன்றும் பயனில்லை. எம்.ஜி.ஆர் முதல்வராக இருந்த போதும் ஜெயலலிதா, கலைஞர் ஆகியோர் முதல்வராக இருந்தபோதும், அரசு ஊழியர் - ஆசிரியர் போராட்டங்கள் நடைபெற்றுள்ளன. பேச்சுவார்த்தைகளும் நடைபெற்றுள்ளன. கோரிக்கைகளும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. ஆனால் இந்த நான்கு வருடங்களில் முதல்வர் சங்கத் தலைவர்களை சந்தித்துப் பேச முன்வரவில்லை என்பது எம்ஜிஆர், கருணாநிதி, ஜெயலலிதா போன்ற முதல்வர்கள் செய்யத் தயங்கிய காரியங்களாகும்.

போராடும் அரசு ஊழியர்கள் - ஆசிரியர்கள் சங்கங்களின் தலைவர்களை அழைத்து 1978ல் முதலமைச்சர் எம்ஜி.ஆர் பேச்சுவார்த்தை நடத்தி னார். மத்திய அரசு ஊழியர்களுக்கிணையான ஊதியம் கேட்டு 1988ல் அரசு ஊழியர்கள் போராட்டம் நடைபெற்றபோது ஆளுநர் ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஆளுநர் அலெக்சாண்டர் போராட்டக் குழுவுடன் பேச்சுவார்த்தை நடத்தி ஒப்பந்தம் போட்டார்.

1988 போராட்டத்திற்குப் பிறகு மத்திய அரசுக்கு இணையான ஊதியத்தை வழங்கிய அரசு அமைச்சுப்பணியாளர்களுக்கு தகுந்த ஊதியம் வழங்கவில்லை என்பதற்காக 1992இல் அரசு ஊழியர் சங்கம் மற்றும் அரசு அலுவலர் ஒன்றியம் ஆகிய சங்கங்கள் ஒன்றிணைந்து போராடியபோது முதலமைச்சர் ஜெயலலிதா போராட்டக் குழுவினரை அழைத்துப் பேசி சில பிரிவினருக்கு 5 சதவீத மேம்படுத்தப்பட்ட ஊதியத்தை வழங்கினார் என்பது வரலாறு.

2003இல் நடைபெற்ற அரசு ஊழியர் - ஆசிரியர் போராட்டக் குழுவினரை முதலமைச்சர் ஜெயலலிதா அழைத்துப் பேச்சுவார்த்தை நடத்தி யுள்ளார். தலைவர்கள் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருந்த நேரமே பணியில் சேர்ந்ததாக கருதப்படும் என்றும் அறிவித்தார். அப்பேச்சு வார்த்தைகளில் அவர் அறிவித்தபடி அரசு ஊழியர் - ஆசிரியர்களின் உரிமைகளை மீள தராதகாரணத் தினால் உருவானதே 2003 வரலாற்று சிறப்பு மிக்க போராட்டம். சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்பை எதிர்த்து உச்ச நீதிமன்றத்திற்கு சங்கத்தின் தலைவர்கள் செல்வதாக முடிவு செய்தபின் அவர்களை பேச்சுவார்த்தைக்கு முதலமைச்சர் ஜெயலலிதா அழைத்ததும் போராட்டக்குழுவினர் அதை ஏற்க மறுத்து நீதிமன்றத்திற்கு சென்று நீதியை நிலைநிறுத்தியதும் வரலாறு. தனது அடக்குமுறை நடவடிக்கைகளை தானே விலக்கிக்கொண்டார் முதலமைச்சர் ஜெயலலிதா.

அவரின் அரசியல் வாரிசுகளாக கூறிக்கொள்ளும் முதல்வரும், துணை முதல்வரும் இவை யாவையும் அறியாதவர்கள் இல்லை.

கலைஞர் கருணாநிதி முதல்வராக இருந்த போதும் போராட்டங்கள் நடந்துள்ளன. பேச்சு வார்த்தைகள் நடைபெற்றுள்ளன. துறைவாரியான போராட்டங்கள் நடைபெறும் போதும் முதல்வர் கருணாநிதி அவர்களை அழைத்துப்பேசி முடித்துவைத்த வரலாறும் உண்டு.

இன்று ஆட்சியில் இருக்கும் மாண்புமிகு முதல்வர் பழனிச்சாமி அவர்கள் கடந்த நான்கு ஆண்டுகாலமாக அரசு ஊழியர்கள் - ஆசிரியர் இயக்கங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தாது மட்டுமல்ல, அவர்களை தொடர்ந்து அலட்சியப் படுத்தி வரும் நிலையை அவர் மேற்கொண்டுள்ளது அவர் நம்முடைய பலத்தை குறைவாகவே மதிப்பிடுகிறார் என்பதையே காட்டுகிறது. அரசு ஊழியர்களின் பலம் என்ன என்பதை அதை 2003ல் உணர்த்தியது போல் மீண்டும் உணர்த்தவே அரசு ஊழியர்கள் சிறை செல்லும் போராட்டத்திற்கு தங்களை உட்படுத்திக் கொண்டனர்.

மக்களை ஆட்சியாளர்கள் சந்திக்கும் தருணம் அதாவது, தேர்தல், இடைத்தேர்தல்கள் வரும்போதெல்லாம் தங்களின் தவறுகளுக்கு பரிகாரம் காண ஆளும் அரசியல் கட்சிகள் முயல்வது வழக்கம். ஆனால் இன்று ஆட்சிப்பொறுப்பில் உள்ளவர்கள் தங்களின் தவறுகளையே சாதனையாக நினைத்துச் செயல்பட்டு வருகின்றனர். அரசு ஊழியர்கள் - ஆசிரியர்களை அழைத்துப்பேசக்கூட அவர்கள் தயாராக இல்லை. இந்தத் தவறுக்கு அவர்கள் தண்டனை பெற்றே தீருவார்கள் என்பது கடந்த கால வரலாறு.

அரசின் அடக்குமுறைகள், காவல்துறை அராஜகங்கள் இவற்றை எல்லாம் மீறி பெரும்பாலான பெண் ஊழியர்கள் பங்கேற்று நடத்தியுள்ள இந்த சிறை நிரப்பும் போராட்டம் அனைத்து தரப்பினரின் கவனத்தையும் ஈர்த்துள்ளது. ஆனாலும் தமிழக முதல்வரும் துணை முதல்வரும் அமைச்சர்களும் அரசு ஊழியர்களின் போராட்டத்திற்கும் தங்களுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்பதுபோல் நீங்கள் என்ன வேண்டுமானாலும் போராடிக் கொள்ளுங்கள் நாங்கள் ஒன்றும் செய்யப் போவதில்லை என்கிற ரீதியில் நடந்து கொண்டு வருகிறார்கள். 2003ல் ஜெயலலிதா அம்மையார் அரசு ஊழியர்கள் போராட்டம் நடத்தினால் எஸ்மா, டெஸ்மா இன்னும் என்னன்ன சட்டங்கள் உள்ளனவோ அத்தனையும் அவர்கள் மீது பாயும் என்று கொக்கரித்தும், அரசு ஊழியர்களும் அவர்தம் குடும்பத்தினரும் வெறும் 5 சதவீதம் பேர்தான் அவர்கள் வோட்டு எனக்கு தேவை இல்லை என்று ஆர்ப்பரித்ததும், அதன்பிறகு அவருக்கு தேர்தலில் அரசு ஊழியர்கள் தங்கள் யார் என்று காட்டியதும் இப்போதைய முதல்வருக்கும் அவருடைய சக அமைச்சர்களுக்கும் தெரியுமா இல்லையா என்று தெரியவில்லை. ஆட்சியாளர்கள் தொடர்ந்து அரசு ஊழியர்களை அழைத்துப் பேச மறுத்து கேவலப்படுத்தி வருவதும், தொடர்ந்து நமது உரிமைகளை பறிக்கும் செயல்களில் ஈடுபட்டு வருவதையும் ஒவ்வொரு அரசு ஊழியரும் உணர்ந்துதான் இருக்கிறார்கள். **அன்று தன்னுடைய கன்றை கொன்ற அரசனின் மகனை எதிர்த்து நீதி கேட்ட விலங்கிற்கு கிடைத்த நீதி, இன்று தங்களுடைய உரிமைகளுக்காக போராடும் அரசு ஊழியர்கள் கேட்டால் விலங்கினும் கீழ்த்தரமாக நடத்தப்படும் இழிநிலைதான் உள்ளது**. இத்தகைய ஆட்சியாளர்களுக்கு நம்முடைய ஒற்றுமையையும் கோபத்தையும் வெளிப்படுத்தும் நேரம் வந்து விட்டது. இனிமேலும் நாம் அரசு நம்முடைய கோரிக்கைகளை செவிமெடுக்கும் என்று நம்பி காலத்தை வீணடிக்காமல் நம்முடைய பறிக்கப்பட்ட உரிமைகளை அரசின் கரங்களிலில் இருந்து திரும்பப் பெறும் நடவடிக்கைகளை துரிதப்படுத்த வேண்டும்.

அதனால் மாநில மையம் நம்முடைய கோரிக்கைகளை கோட்டை நோக்கி பெருந்திரளாகச் சென்று முதல்வரிடம் கொடுப்பதென்றும், அதை செய்ய விடாமல் காவல் துறையும், தமிழக அரசும் தடுக்கும்பட்சத்தில் கோட்டையை முற்றுகையிட்டு முதல்வரிடம் கோரிக்கை மனுவை கொடுப்போம். கோரிக்கைகளை வென்றெடுப்போம்.

தோழர்களே! இத்தருணத்தில் ஒன்றை நினைவில் கொள்வோம்:

உறங்கிக் கொண்டிருக்கும் போர்வாளைவிட
ஊர்ந்து கொண்டிருக்கும் புழு உயர்ந்ததுதான்.

எனவே நாம் ஒவ்வொருவரும் நம்முடைய உரிமைகளை மீட்டெடுப்பதற்காக உயிர்த்தெழுவோம். 19.02.2021ல் சென்னையை நோக்கி அணிவகுப்போம். அனைவரும் ஒன்றுகூடி

உரிமைக் குரல் முழங்குவோம், உதாசீனப்படுத்தினால்
கோட்டையை முற்றுகையிட்டு முடக்குவோம்!

■



தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
(பதிவு எண் : 237/84)
மாநில மையம்
தோழர் எம்.ஆர்.அப்பன் இல்லம்
என்.46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5
கோட்டையை நோக்கி பெருந்திரளாக சென்று முதல்வரிடம் கோரிக்கை முறையீடு வழங்கி தீர்வு காணும் இயக்கம்!!
உரிமைக்குரல் முழங்குவோம்,
முதல்வர் நம்மை அழைக்க மறுத்து
உதாசீனப்படுத்தினால்...
கோட்டையை முற்றுகையிட்டு முடக்குவோம்!
இடம்
சென்னை சேப்பாக்கம்
அரசு விருந்தினர் மாளிகை அருகில்
நாள் : 19-02-2021 வெள்ளிக்கிழமை
நேரம் : காலை 11.00 மணி
உரிமைகளை மீட்டெடுக்க உயிர்த்தெழுவோம்!
சென்னையை நோக்கி அணிவகுப்போம்!

## நிகழ்வுகள்

**19-02-2021 வெள்ளிக்கிழமை | காலை 11.00 மணி**

தலைமையுரை
**மு.அன்பரசு**
மாநிலத்தலைவர்

வரவேற்புரை
**மு.பாஸ்கரன்**
மாநிலப்பொருளாளர்

விளக்கவுரை
**ஆ.செல்வம்**
பொதுச்செயலாளர்

துவக்கவுரை
**நெ.இல.சீதரன்**
மாநிலத்தலைவர்
தமிழ்நாடு அரசு அனைத்துத்துறை ஓய்வூதியர் சங்கம்

## வாழ்த்துக் கருத்துரை

**ச.மயில்**
பொதுச்செயலாளர், TNPTF

**கு.வெங்கடேசன்**
மாநில ஒருங்கிணைப்பாளர், ஜாக்டோ-ஜியோ

## கோரிக்கை நியாயங்களை விளக்கி உரிமைக்குரல்

**எம்.பி. முருகையன்**
மாநில பொதுச்செயலாளர்
தமிழ்நாடு
வருவாய்த்துறை அலுவலர் சங்கம்

**ச.பாரி**
பொதுச்செயலாளர்
தமிழ்நாடு ஊரக வளர்ச்சித்துறை
அலுவலர்கள் சங்கம்

**சி.கலைச்செல்வி**
மாநில துணைத்தலைவர்
தமிழ்நாடு
வணிகவரிப்பணியாளர் சங்கம்

**ம. அந்தோணிசாமி**
ஆட்சிமன்றகுழு உறுப்பினர்
தமிழ்நாடு தொழில்நுட்ப ஊழியர்
சங்கங்களின் கூட்டமைப்பு

**ப.சுந்தரம்மாள்**
மாநிலத்தலைவர்
தமிழ்நாடு
சத்துணவு ஊழியர் சங்கம்

**ஆ.அம்சராஜ்**
பொதுச்செயலாளர்
தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை
சாலைப்பணியாளர் சங்கம்

நிறைவுரை
**அ.சவுந்தரராஜன்**
மாநிலத்தலைவர் சிஐடியு

நன்றியுரை
**தெ.வாசுகி**
மாநிலச்செயலாளர்



# இழந்ததை மீட்டிட, இருப்பதை காத்திட...
# 19.01.2021 - 20.01.2021
# மண்டல அளவிலான போராட்ட ஆயத்த மாநாடுகள்

தமிழ்நாடு அரசுஊழியர் சங்கத்தின் மாநில பிரதிநிதித்துவப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட அறைகூவல் தீர்மானத்தின்படி

*1.* CPS திட்டத்தை ரத்து செய்து பழைய பென்சன் திட்டத்தை நடைமுறைப்படுத்திட வேண்டும்.

*2.* ஜாக்டோ-ஜியோ போராட்டத்தின் போது போராட்டத்தில் பங்கேற்றோர் மீது ஏற்படுத்தப்பட்ட குற்றக் குறிப்பாணைகளை ரத்து செய்யக் கோரியும், முன்னாள் மாநிலத் தலைவர் மு. சுப்பிரமணியன் உள்ளிட்டோரின் பணி ஓய்வின்போதான தற்காலிக பணி நீக்கத்தை ரத்து செய்திட வேண்டும்

*3.* *21 மாத கால நிலுவைத் தொகை முடக்கப்பட்ட அகவிலைப்படி, பறிக்கப்பட்ட சரண்டர் உள்ளிட்ட உரிமைகளை பெற்றிட வேண்டும்.*

*4.* சத்துணவு மற்றும் அங்கன்வாடி, வருவாய் கிராம உதவியாளர்கள், ஊர்ப்புற நூலகர்கள், எம்.ஆர்.பி. செவிலியர்கள் உள்ளிட்ட சிறப்பு காலமுறை ஊதியம், தொகுப்பூதியம், மதிப்பூதியம் பெறும் மூன்றரை இலட்சம் ஊழியர்களுக்கு வரையறுக்கப்பட்ட காலமுறை ஊதியம் வழங்கிட வேண்டும்.

*5.* இளைஞர்களின் வேலைவாய்ப்பினைப் பறிக்கும் ஆதிசேஷைய்யா, இ.ஆ.ப. தலைமையிலான பணியாளர் சீரமைப்பு குழுவின் பரிந்துரையை ரத்து செய்திட வேண்டும்

*6. 2002ல் பணி நீக்கம் செய்யப்பட்ட* சாலைப்பணியாளர்களின் பணி நீக்க காலமான *41 மாத காலத்தை பணிக் காலமாக முறைப்படுத்திட வேண்டும்*

*7.* ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் திட்டத்தை (IFHRMS) கைவிட வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழகம் முழுவதும் மண்டல மாநாடுகள் நடைபெற்றன. அதன் ஒருபகுதியாக...

## சென்னை மண்டலம்

தென்சென்னை, வடசென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர் ஆகிய






மாவட்டங்களை உள்ளடக்கிய சென்னை மண்டல போராட்ட ஆயத்த மாநாடு 19.01.2021 அன்று மாலை 3.00 மணியளவில் தர்மபிரகாஷ் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. இம்மாநாட்டில் மாவட்டத் தலைவர்கள் ப.சுந்தரம்மாள் (வடசென்னை), சா.டானியல் ஜெயசிங் (தென்சென்னை), வி.லெனின், (காஞ்சிபுரம்) சி.முகமதுஉசேன் (செங்கல்பட்டு), எ.சந்திர சேகரன் (திருவள்ளூர்) ஆகியோர் தலைமை வகித்தனர்.

தென்தென்னை மாவட்டப் பொருளாளர் உ.சுமதி வரவேற்புரையாற்றினார். மாநாட்டினை தொடங்கி வைத்து மாநிலச் செயலாளர் தெ.வாசுகி உரையாற்றினார். கோரிக்கைகளை விளக்கி மாவட்டச் செயலாளர்கள் ம.அந்தோணி சாமி (வடசென்னை), நா.வினோத்குமார்

(தென்சென்னை), துரை.மருதன் (காஞ்சிபுரம்), எம். தாமோதரன் (செங்கல்பட்டு), இரா.பாண்டு ரங்கன் (திருவள்ளூர்) ஆகியோர் உரையாற்றினர். மாநாட்டினை நிறைவு செய்து மாநிலத் தலைவர் மு. அன்பரசு சிறப்புரையாற்றினார். வடசென்னை மாவட்டப் பொருளாளர் த.ஏழுமலை நன்றி கூறினார். இம்மாநாட்டில் 300க்கும் மேற்பட்ட அரசு ஊழியர்கள் பங்கேற்றனர். மாநாட்டில் செங்கல்பட்டு-750, காஞ்சிபுரம்-350 உறுப்பினர் களுக்கான சந்தா தொகை மாநிலத் தலைவர் மு.அன்பரசு அவர்களிடம் வழங்கப்பட்டது.

## கோவை மண்டலம்

ஈரோடு,நாமக்கல், திருப்பூர், கோவை, நீலகிரி ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய கோவை மண்டல போராட்ட ஆயத்த மாநாடு 19.01.2021 அன்று மாலை 3.00 மணியளவில் கோயம்புத்தூர் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. மாவட்டத் தலைவர்கள் ராக்கிமுத்து (ஈரோடு) கு.இராஜேந்திரபிரசாத் (நாமக்கல்), ஏ.ராணி (திருப்பூர்), பால்ராஜ் (கோவை) கி.முத்துகுமார் (நீலகிரி) ஆகியோர் தலைமை வகித்தனர். மாநாட்டினை தொடங்கி வைத்து மாநில துணைத் தலைவர் மு.சீனிவாசன் துவக்க உரையாற்றினர். மாநில செயலாளர் சி.பரமேஸ்வரி கோரிக்கை விளக்கவுரையாற்றினார். கோரிக்கைகளை விளக்கி மாவட்டச் செயலாளர்கள் ச.விஜய மனோகரன் (ஈரோடு), இரா.முருகேசன் (நாமக்கல்), எம்.பாலசுப்பிரமணியன் (திருப்பூர்), பி.செந்தில்குமார் (கோவை), ஏ.ஆர். ஆஸரா (நீலகிரி) ஆகியோர் உரையாற்றினர். மாநாட்டினை நிறைவு செய்து பொதுச் செயலாளர் ஆ.செல்வம் சிறப்புரையாற்றினார். ஓய்வூதியர் சங்க மாநில துணைத் தலைவர் எஸ்.சந்திரன் வாழ்த்துரை வழங்கினார். பி.நடராஜன் நன்றி கூறினார். மாநாட்டில் ஈரோடு 400, திருப்பூர்-600, கோவை-100, நீலகிரி-300க்கான உறுப்பினர் சந்தாவிற்கான தொகை பொதுச் செயலாளர் அவர்களிடம் வழங்கப்பட்டது.




## கரூர் மண்டலம்

கரூர்,திண்டுக்கல், மதுரை, தேனி, தருச்சி ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய கரூர் மண்டல அளவிலான போராட்ட ஆயத்த மாநாடு 19.01.2021 அன்று மாலை 3.00 மணியளவில் புனித தெரேசா மேல்நிலைப் பள்ளி கூட்டரங்கில் நடைபெற்றது. மாவட்டத் தலைவர்கள் மு.சுப்பிரமணியன் (கரூர்) விஜயகுமார் (திண்டுக்கல்), து.மூர்த்தி), (மதுரை) கு.வரதராஜன் (தேனி), எம்.பி.விவேகானந்தன்(திருச்சி) ஆகியோர் தலைமை வகித்தனர். கோரிக்கைகளை விளக்கி மாவட்டச் செயலாளர்கள் மு.சக்திவேல் (கரூர்), எகு.முபாரக்அலி (திண்டுக்கல்). கா.நீதிராஜா (மதுரை) இராமகிருஷ்ணன் (தேனி), பழனிச்சாமி (திருச்சி) ஆகியோர் உரையாற்றினர். மாநாட்டினை நிறைவு செய்து மாநில துணைத் தலைவர் இரா.மங்களபாண்டியன் சிறப்புரை யாற்றினார்.




## கள்ளக்குறிச்சி மண்டலம்

கள்ளக்குறிச்சி, விழுப்புரம், கடலூர், சேலம் ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய கள்ளக் குறிச்சி மண்டல போராட்ட ஆயத்த மாநாடு 20.01.2021 அன்று கண்ணன் மஹாலில் நடைபெற்றது.

இம்மாநாட்டிற்கு மாவட்டத் தலைவர்கள் எல்.ஆனந்த கிருஷ்ணன் (கள்ளக்குறிச்சி), ஜெ.ஜெயசங்கர் (விழுப்புரம்), டி.ரவிச்சந்திரன் (கடலூர்), துணைத் தலைவர் சண்முகம் (சேலம்)




ஆகியோர் தலைமை வகித்தனர். கள்ளக்குறிச்சி மாவட்டப் பொருளாளர் பி.ரவி வரவேற்புரை யாற்றினார்.

மாநில துணைத் தலைவர் மு.சீனிவாசன் மாநாட்டில் துவக்க உரையாற்றினார். கோரிக்கை களை விளக்கி மாவட்டச் செயலாளர்கள் கே. மகாலிங்கம் (கள்ளக்குறிச்சி), துணைத் தலைவர் தேசிங்கு (விழுப்புரம்),எல். அரிகிருஷ்ணன் (கடலூர்), பி. சுரேஷ் (சேலம்) ஆகியோர் உரையாற்றினர். மாநிலச் செயலாளர் தெ.வாசுகி சிறப்புரையாற்றினார். நிறைவாக மாநிலத் தலைவர் மு.அன்பரசு நிறைவுரையாற்றினார். விழுப்புரம் மாவட்டப் பொருளாளர் கு.சரவணன் நன்றி கூறினார். மாநாட்டில் கள்ளக்குறிச்சி, விழுப்புரம் ஆகிய மாவட்டங்கள் சார்பில் தலா 1000, கடலூர் மாவட்டம் 500 உறுப்பினர் சந்தாக்களுக்கான தொகை மாநிலத் தலைவரிடம் வழங்கப்பட்டது.

## தஞ்சை மண்டலம்

பெரம்பலூர், அரியலூர், திருவாரூர், தஞ்சாவூர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய தஞ்சை மண்டல போராட்ட ஆயத்த மாநாடு 20.1.2021 அன்று தஞ்சாவூர் பெசன்ட் அரங்கில் நடைபெற்றது. இந்த மாநாட்டிற்கு மாவட்டத் தலைவர்கள் சா.கோதண்டபாணி (தஞ்சை), ஆ.ராஜமாணிக்கம் (திருவாரூர்), து.இளவரசன் (நாகப்பட்டினம்), ச.இளங்கோவன் (பெரம்பலூர்), பஞ்சாபிகேசன் (அரியலூர்) எஸ்.ஜபருல்லா (புதுக்கோட்டை) ஆகியோர் தலைமை வகித்தனர். ஆ.ரங்கசாமி (தஞ்சை) வரவேற்புரை யாற்றினார். மாநில துணைத் தலைவர் ஆ.பெரியசாமி தொடக்கவுரையாற்றினார். கோரிக்கைகளை விளக்கி மாவட்டச் செயலாளர் கள் ஆ.ரெங்கசாமி (தஞ்சை), வெ.சோமசுந்தரம் (திருவாரூர்), அ.தி.அன்பழகன் (நாகப்பட்டினம்),






ப.குமரிஅனந்தன் (பெரம்பலூர்), எம்.கே.முத்து (அரியலூர்), ஆர்.ரங்கசாமி (புதுக்கோட்டை) ஆகியோர் உரையாற்றினர். மாநிலச் செயலாளர் இரா.ந.நம்பிராஜன் சிறப்புரையாற்றினார். மாநில செயலாளர் உ.சண்முகம் நிரைவுரையாற்றினார். தஞ்சை மாவட்ட பொருளாளர் உ.பாஸ்கரன் நன்றி கூறினார். இதில் தஞ்சாவூர் - 1100, திருவாரூர் - 100, புதுக்கோட்டை - 600 உறுப்பினர் சந்தாக்கள் வழங்கப்பட்டன.

## விருதுநகர் மண்டலம்

விருதுநகர்,இராமநாதபுரம், சிவகங்கை, திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய விருதுநகர் மண்டல போராட்ட ஆயத்த மாநாடு விருதுநகர் லட்சுமி திருமண மகாலில் நடைபெற்றது. இந்த மாநாட்டிற்கு மாவட்டத் தலைவர்கள் த.பால்முருகன் (விருதுநகர்). சோமசுந்தர் (இராமநாதபுரம்), ஆ.சுரேஷ் (சிவகங்கை), வி.பார்த்தசாரதி (திருநெல்வேலி), து.செந்தூர் ராஜன் (தூத்துக்குடி), என்.பாலகிருஷ்ணன் (கன்னியாகுமரி) ஆகியோர் தலைமை வகித்தனர். மாநில துணைத் தலைவர் மொ.ஞானத்தம்பி துவக்கவுரையாற்றினார். மாநிலச் செயலாளர் சி.எஸ்.கிறிஸ்டோபர் சிறப்புரையாற்றினார். கோரிக்கைகளை விளக்கி மாவட்டச் செயலாளர்கள் கா. கருப்பையா (விருதுநகர்), (இராமநாதபுரம்), (சிவகங்கை), ஜி.துரைசிங் (திருநெல்வேலி), தே. முருகன் (தூத்துக்குடி) எகு.விஜயகுமார் (கன்னியாகுமரி) ஆகியோர்




உரையாற்றினர். மாநில துணைத் தலைவர் என்.வெங்கடேசன் நிறைவுரையாற்றினார். முத்துவெள்ளையப்பன் நன்றி கூறினார். கன்னியாகுமரி - 1000, தூத்துக்குடி 500, விருதுநகர் - 250 உறுப்பினர் சந்தா வழங்கப்பட்டது.


## திருவண்ணாமலை மண்டலம்

திருவண்ணாமலை, வேலூர், தருமபுரி, கிருஷ்ணகிரி, இராணிபேட்டை ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய திருவண்ணாமலை மண்டல போராட்ட ஆயத்த மாநாடு திருவண்ணாமலை சுபலட்சுமி மகாலில் நடைபெற்றது. இந்த மாநாட்டிற்கு மாவட்டத் தலைவர்கள் (திருவண்ணாமலை) கே.சரவணராஜ் (வேலூர்) ஆ.சுருளிநாதன் (தருமபுரி), பி.சந்திரன் (கிருஷ்ணகிரி), ஜோசப்கென்னடி (இராணி பேட்டை) ஆகியோர் தலைமை வகித்தனர். மாநில துணைத்தலைவர் கோ.பழனியம்மாள் தொடக்கவுரையாற்றினார். கோரிக்கைகளை விளக்கி மாவட்டச் செயலாளர்கள் க.பிரபு (திருவண்ணாமலை), ஜோ.ஜெயசிலன் (வேலூர்), ஆர்.நடராஜன் (கிருஷ்ணகிரி), கோ.மோகனமூர்த்தி (இராணிப்பேட்டை)




ஆகியோர் உரையாற்றினர். மாநாட்டின் நிறைவாக மாநிலப் பொருளாளர் மு.பாஸ்கரன் உரை யாற்றினார். மாவட்ட பொருளாளர் பா.வேங்கடவரதன் நன்றி கூறினார். ■

# தோழர் ஆர்.ஜி.கார்னிக் அவர்களுக்கு வீரவணக்கம்



அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தின் கௌரவத் தலைவராகவும், மகாராஷ்டிராவின் மாநில அரசு ஊழியர் சங்கத்தின் மத்திய பொதுச் செயலாளராகவும் இருந்த தோழர் ஆர்.ஜி.கார்னிக் அவர்கள் தொடர்ச்சியாக 50 ஆண்டுகள் மாநில அரசு ஊழியர்களை வழிநடத்தி அவர்களுக்கு கௌரவமான ஊதியம் பெற்று வழங்கினார். அவரது தலைமையில் நடைபெற்ற 54 நாள் வேலைநிறுத்தம் தொழிலாளர் இயக்கத்தில் ஒரு மைல்கல் என்பது குறிப்பிடத்தக்கது.

அமைச்சக ஊழியர் சங்கம் முதன்முதலில் 1956இல் கார்னிக் அவர்களால் உருவாக்கப்பட்டது. 1962 முதல் மகாராஷ்டிராவின் மாநில அரசு ஊழியர் மத்திய ஒன்றியத்தால் நிறுவப்பட்டு வழிநடத்தப்பட்ட இவர், 1991 முதல் தனியார்மயமாக்கல் மற்றும் ஒப்பந்தத்திற்கு எதிராக தொடர்ந்து போராடியவர். அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தை தேசிய அளவில் பல ஆண்டுகளாக வழிநடத்தினார். இவரது முழுப்பெயர் ராமகாந்த் கணேஷ் கர்னிக்.

நமது MRA மற்றும் RMS ஆகியோரின் மீது மிகுந்த பற்றும் அக்கறையும் கொண்டவர். அவர் ஜனவரி 27, 1930 இல் பிறந்தார். பிப்ரவரி 06, 2021ல் தனது 91வது வயதில் மறைந்தார். தோழர் ஆர்.ஜி. கார்னிக் மறைவு AISGEF-க்கு பேரிழப்பாகும். தோழரின் மறைவிற்கு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கண்ணீர் அஞ்சலி வீரவணக்கம் செலுத்துகிறது.

# பிப்ரவரி 23: ஜூலியஸ் பூசிக் பிறந்தநாள்



**செ**க்கோஸ்லேவேகியாவில் உதித்த ஜூலியஸ் பூசிக் தமது 12ஆம் வயதிலேயே இலக்கியங்களைப் படைத்தவர். செக்கோஸ்லேவேகியா கம்யூனிஸ்ட் கட்சியின் மாணவர் சங்கத்தில் பணியாற்றியவர். பத்திரிக்கையாளராகவும் போராளியாகவும் திகழ்ந்த பன்முகத் தன்மை வாய்ந்த தோழர்.

1929 ஆம் ஆண்டு நடைபெற்ற சுரங்கத் தொழிலாளர்களின் வீரஞ்செறிந்த வேலைநிறுத்தப் போராட்டத்தில் பங்கேற்றுச் சமர் செய்தவர்.

இரண்டாம் உலகப் போரில் நாஜிகளின் எதிர்ப்பு முன்னணியில் முனைமுகத்து நின்றவர். அவரது வீரம்மிக்க செயல்பாடுகளால் கொதித்த நாஜிகள் 1942ஆம் ஆண்டில் ஜூலியஸ் பூசிக்கைச் சிறையில் அடைத்தனர்.

சிறையிலிருந்தபோதே 'தூக்குமேடைக் குறிப்புகள்' எனும் உலகப் புகழ் வாய்ந்த நூலை எழுதினார். சிறையில் கொடுமைப்படுத்தப்பட்ட போதிலும் மனந்தளராது துனிவுடன் எதிர்கொண்ட மகத்தான கம்யூனிஸ்டாக விளங்கினார். 1943 ஆம் ஆண்டு செப்டம்பர் 8ஆம் நாள் தூக்கிலிடப்பட்டார்.

ஜூலியஸ் பூசிக்கிற்கு 1950ஆம் ஆண்டு 'சர்வதேச சமாதானப் பரிசு' வழங்கப்பட்டது.

புகழ் வாய்ந்த ஜூலியஸ் பூசிக் சிறந்த கம்யூனிஸ்டாக வாழ்ந்ததனால்தான் வரலாற்றில் நிலைத்து நிற்கிறார். அவர் கம்யூனிஸ்ட் குறித்து கூறுவதைக் கேளுங்கள்....

"கம்யூனிஸ்டுகளாகிய நாங்கள் மனிதனை நேசிக்கிறோம். மனிதத் தன்மையுள்ள எதுவும் எங்களுக்குப் புறம்பானதல்ல. மிகச் சாதாரண மனித இன்பங்களின் மதிப்பையும் நாங்கள் அறிவோம். அவற்றிலும் நாங்கள் மகிழ்ச்சி காண முடியும். எனவே தான், மனிதன் உழைப்பை மனிதன் பறிக்கும் அராஜக அமைப்பின் கொடுமைகளிலிருந்து, அதாவது, பயங்கரப் போரின் துன்ப துயரங்கள், வேலையில்லாத் திண்டாட்டம் ஆகிய கொடுமைகளிலிருந்து விடுவிக்கப்பட்டு, மகிழ்ச்சியும் நிறைவும், ஆரோக்கியமும் சுதந்திரமும் உள்ள மனிதனுக்கு, இந்தப் பரந்த உலகில் ஒரு இடம் அளிப்பதற்காக, எங்கள் சுகபோகங்களைத் தியாகம் செய்ய நாங்கள் ஒரு போதும் தயங்குவதில்லை. லாபம், லாபம், மீண்டும் லாபம்! இதையே குறிக்கோளாகக் கொண்ட ஒரு அமைப்பு, மக்களுக்கிடையே நேச உறவு நிலவுவதற்குப் பதிலாக, பண உறவையே அடிப்படையாகக் கொண்ட ஒரு அமைப்பு, மனிதனைக் காட்டிலும் பணத்திற்கே அதிக மதிப்பைத் தருகிற ஒரு அமைப்பு மனிதத் தன்மை அற்றதாகும். மனிதனை நேசிக்கிற ஒரு மனிதனுக்கு ஒரு கம்யூனிஸ்டுக்கு, மக்களின் மனிதத் தன்மை பறிக்கப்படுகின்ற பொழுது, சும்மா இருக்க உரிமை உண்டா? இல்லை. எனவேதான், நிறைவும் சுதந்திரமும் பண்பும் பொருந்திய மனிதனுக்காகப் போராடுவதில், தங்கள் முழு வலிமையை பயன்படுத்தவோ, தியாகம் செய்யவோ கம்யூனிஸ்டுகள் பின் வாங்குவதில்லை!"

ஜூலியஸ் பூசிக்கின் நினைவு நாளில் அவரின் கூற்றுப்படி சிறந்த கம்யூனிஸ்டாகத் திகழ்வதைவிட கம்யூனிஸ்டுகளுக்கு வேறென்ன உயர்வைக் கொடுக்கும்?

- **பெரணமல்லூர் சேகரன்**

## திருவண்ணாமலை மாவட்டத் தலைவர் தேர்வு

24.01.2021 அன்று திருவண்ணாமலை மாவட்ட செயற்குழு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்டத் தலைவராக செயல்பட்டு வந்த ஆர்.ஜோதிசங்கர், துணை ஆட்சியராக பதவி உயர்வில் சென்றதால் ஏற்பட்ட காலியிடத்திற்கு வருவாய்த்துறையை சேர்ந்த **எஸ்.பார்த்திபன்** தலைவராக தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

# அரசு ஊழியர்கள் ஏன் போராடுகிறார்கள்?

அரசு ஊழியர்கள், நிலுவையில் உள்ள தங்களது கோரிக்கைகளை முதல்வரோ, அமைச்சர்களோ, அழைத்துப் பேசி தீர்க்க வேண்டும் என்று தமிழக அரசிடம் கடந்த நான்கு ஆண்டுகளாக வலியுறுத்தி அதன் பேரில் அரசு கவனம் செலுத்தாததினால் மறியல் போராட்டமும் சிறை நிரப்பும் போராட்டமும் நடத்த வேண்டிய நிர்ப்பந்தம் இப்போது எழுந்துள்ளது. கடந்த 2019 ஜனவரியில் இதுகுறித்து போராட்டம் மேற்கொண்ட போது போராட்டத்தை விலக்கிக்கொண்டு வாருங்கள் பேசலாம் என்று முதல்வர் கூறியதன் பேரில் போராட்டத்தை முடித்துக்கொண்டு பேச்சு வார்த்தைக்கு கூப்பிடுவார் முதல்வர் என இரண்டு ஆண்டுகள் காத்திருந்தது தான் மிச்சம். மேலும் 2019 ஜனவரி போராட்டத்தில் ஈடுபட்டு குற்றக்



குறிப்பாணைகள் ஒழுங்கு நடவடிக்கைகள் வழங்கப்பட்ட, வழக்குகள் போடப்பட்ட, பணியிட மாறுதல் செய்யப்பட்ட அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் மீதான நடவடிக்கைகளை திரும்பப் பெற வேண்டும் என்ற கோரிக்கையைக்கூட அரசு பரிசீலிக்க தயாராக இல்லை என்பதும் இந்தப் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டிய முக்கிய காரணிகளுள் ஒன்றாகிறது.

போராட்ட ஆயத்த மாநாட்டை மதுரையில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் நடத்தியபோது





தி.மு.க, காங்கிரஸ், கம்யூனிஸ்ட் மற்றும் விடுதலை சிறுத்தைகள் ஆகிய கட்சிகளின் தலைவர்கள் ஆளும் அதிமுக ஆட்சியில் சர்வாதிகாரத்தனத்தை சுட்டிக் காட்டிய பின்னர் தமிழக அரசு, அரசு ஊழியர்கள் போராட்டம் துவங்குவதற்கு முன்னதாக, அரசு ஊழியர்கள் - ஆசிரியர்கள் மீது போடப்பட்டிருந்த குற்றக் குறிப்பாணைகளையும், வழக்குகளையும் திரும்பப் பெறுவதாகவும் ஒழுங்கு நடவடிக்கைகளை கைவிடுவதாகவும் அறிவித்தது.

இது வரவேற்கத்தக்க நடவடிக்கையே, ஆனால் பல லட்சக்கணக்கான அரசு ஊழியர்களின் வாழ்வாதார கோரிக்கைகள் குறித்த



அரசு ஊழியர்கள் - ஆசிரியர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் சங்கங்களின் தலைவர்களை அழைத்துப் பேசி தீர்வு காண முதல்வர் முன்வராததால் அரசு ஊழியர்கள் பிப்.2 முதல் தமிழ்நாடு முழுவதும், மறியல் போராட்டம் நடத்தி கைதாகி வருகின்றனர். ஆங்காங்கு காத்திருப்புப் போராட்டமும் நடத்தி வருகின்றனர்.

ஜெயலலிதா 2003இல் முதலமைச்சராக இருந்தபோது நடைபெற்ற அரசு ஊழியர், ஆசிரியர் போராட்டங்களும், அதன் விளைவுகள் குறித்தும் ஆட்சிக்கட்டிலில் அமர்ந்திருப்பவர்கள்



அவ்வளவு எளிதாக மறந்துவிட முடியாது. 2003இல் 1,86,000க்கும் மேலான அரசு ஊழியர்களை ஒரே அரசாணையில் டிஸ்மிஸ் செய்த ஜெயலலிதா, சட்டமன்ற தேர்தலுக்கு முன்னர், தனது ஆட்சிக் காலத்திலேயே அனைவரையும் மீண்டும் பணியில் அமர்த்தினார். சிறையில் அரசு ஊழியர்கள் - ஆசிரியர்கள் மாதக் கணக்கில் இருந்த காலத்தை பணிக்காலமாக வரன்முறை செய்து ஆணையிட்டார். வேலை நிறுத்த நாட்களுக்கு ஊதியம் வழங்கினார். ஆனால் அரசு ஊழியர்களுக்கு ஜெயலலிதா அம்மையார் மீது இருந்த கோபம் தீரவில்லை.



அதனால் 2006ஆம் நடந்த தேர்தலில் அதிமுக உத்வேகத்துடன் பகை முடிக்கும் பணியில் இறங்கினர் அரசு ஊழியர்கள். அதனால் அரசு ஊழியர் சங்கம் எதிர்க்கட்சித் தலைவர்களை அழைத்து மதுரையில் ஒரு மாநாட்டை நடத்தியது. அந்த மாநாட்டின் மையக்குரல் அரசு ஊழியர்களை - ஆசிரியர்களை தமிழ்நாட்டு மக்களை துன்புறுத்தி வந்த அரசினை அகற்றுவதற்கான உறுதினை வெளிப்படுத்தியது.





அரசு ஊழியர் சங்கத் தலைவர்கள் களத்தில் இறங்கினர். விளைவு ஆளுங்கட்சியான ஜெயலலிதா தலைமையிலான அரசு படுதோல்வியை சந்தித்தது. இது வரலாறு.

ஜெயலலிதாவின் மறைவிற்குப் பிறகு அமைந்த அதிமுக ஆட்சியில் கடந்த நான்கு ஆண்டுகளில் அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் கடுமையாக பழிவாங்கப்பட்டுள்ளனர். 5000க்கும் மேற்பட்ட அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் ஆண்டு ஊதிய உயர்வு பெற முடியாமலும், பதவி உயர்வு பெற முடியாமலும், பணி ஓய்வு பெற்றும் பலன்கள் கிடைக்கப் பெறாமலும், தமிழக அரசு போட்ட பொய் வழக்குகளில் சிக்கி காவல் நிலையங்களுக்கும் நீதிமன்றங்களின் வாசல்களிலும் தவம் கிடக்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் நடத்திய சத்துணவு ஊழியர்களின் ஊதியம்





பிடிக்கப்பட்டு பழிவாங்கப்பட்டுள்ளனர். ஆயிரக்கணக்கான அரசு ஊழியர்கள் - ஆசிரியர்கள் மீது போடப்பட்டுள்ள பொய் வழக்குகளை திரும்பப் பெற அரசு தயக்கம் காட்டி வந்தது. மத்திய அரசின் கைப்பாவையாக செயல்பட்டுவரும் தமிழ்நாடு அரசு, மத்திய அரசின் முடிவின்படி, தமிழ்நாடு அரசு ஊழியர் ஆசிரியர்களுக்கு மூன்று தவணை அகவிலைப்படியை முடக்கி வைத்துள்ளது. சுமார் 6000 கோடி ரூபாய் இதனால் ஊழியர்களுக்கு இழப்பு ஏற்பட்டுள்ளது, கொரோனா தடுப்புப் பணியில் ஈடுபட்டுள்ள முன் களப் பணியாளர்கள் இறந்துபோனால் அவர்கள்



குடும்பத்தாருக்கு ரூ.25 லட்சம் இழப்பீடு வழங்கப்படும் என அறிவித்த எடப்பாடி அரசு தனது வாக்குறுதியை காற்றில் பறக்கவிட்டது. இதனால் சுகாதாரத்துறை, காவல் துறையில் பணியாற்றி பாதிக்கப்பட்டுள்ள மருத்துவர்கள், காவலர்கள் இந்த அரசின் மீது கடும் அதிருப்தியில் உள்ளனர்.

இந்நிலையில் அரசு ஊழியர் சங்கம் தொடர்ந்து அரசுடன் பேச்சுவார்த்தை நடத்த முயன்றும் பயனில்லை. எம்.ஜி.ஆர் முதல்வராக இருந்தபோதும் ஜெயலலிதா, கலைஞர் ஆகியோர் முதல்வராக இருந்தபோதும், அரசு ஊழியர்கள் - ஆசிரியர்கள் போராட்டங்கள் நடைபெற்றுள்ளன. பேச்சுவார்த்தைகளும் நடைபெற்றுள்ளன. கோரிக்கைகளும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. ஆனால் இந்த நான்கு வருடங்களில் முதல்வர், சங்கத் தலைவர்களை சந்தித்துப் பேச முன்வரவில்லை என்பது எம்.ஜி.ஆர், கருணாநிதி, ஜெயலலிதா போன்ற முதல்வர்கள் செய்யத் தயங்கிய காரியங்களாகும்.



போராடும் அரசு ஊழியர்கள் - ஆசிரியர்கள் சங்கங்களின் தலைவர்களை அழைத்து 1978ல் முதலமைச்சர் எம்.ஜி.ஆர் பேச்சுவார்த்தை நடத்தினார். மத்திய அரசு ஊழியர்களுக்கிணையான ஊதியம் கேட்டு 1988ல் அரசு ஊழியர்கள் போராட்டம் நடைபெற்றபோது ஆளுநர் ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருந்தது.







ஆளுநர் அலெக்சாண்டர் போராட்டக்குழுவுடன் பேச்சுவார்த்தை நடத்தி ஒப்பந்தம் போட்டார்.

1988 போராட்டத்திற்குப் பிறகு மத்திய அரசிற்கிணையான ஊதியத்தை வழங்கிய அரசு அமைச்சுப்பணியாளர்களுக்கு தகுந்த ஊதியம் வழங்கவில்லை என்பதற்காக 1992 ல் அரசு ஊழியர் சங்கம் மற்றும் அரசு அலுவலர் ஒன்றியம் ஆகிய சங்கங்கள் ஒன்றிணைந்து போராடியபோது முதலமைச்சர் ஜெயலலிதா போராட்டக்குழுவினரை அழைத்துப் பேசி சில பிரிவினருக்கு 5 சதவீத மேம்படுத்தப்பட்ட ஊதியத்தை வழங்கினார் என்பது வரலாறு.



2002 ல் நடைபெற்ற அரசு ஊழியர் - ஆசிரியர் போராட்டக்குழுவினரை முதலமைச்சர் ஜெயலலிதா அழைத்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். தலைவர்கள் பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டிருந்த நேரமே பணியில் சேர்ந்ததாக கருதப்படும் என்றும் அறிவித்தார். அப்பேச்சுவார்த்தைகளில் அவர் அறிவித்தபடி அரசு ஊழியர் - ஆசிரியர்களின் உரிமைகளை மீள தராததகாரணத்தினால் உருவானதே 2003 வரலாற்று சிறப்பு மிக்க போராட்டம். சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்பை எதிர்த்து உச்ச நீதிமன்றத்திற்கு சங்கத்தின் தலைவர்கள் செல்வதாக முடிவு செய்தபின் அவர்களை பேச்சுவார்த்தைக்கு முதலமைச்சர் ஜெயலலிதா அழைத்தும் போராட்டக்குழுவினர் அதை ஏற்க மறுத்து நீதிமன்றத்திற்கு சென்று நீதியை நிலைநிறுத்தியதும் வரலாறு. தனது





அடக்குமுறை நடவடிக்கைகளை தானே விலக்கிக் கொண்டார் முதலமைச்சர் ஜெயலலிதா. அவரின் அரசியல் வாரிசுகளாக கூறிக்கொள்ளும் முதல் வரும், துணை முதல்வரும் இவையாவையும் அறியாதவர்கள் இல்லை.

கருணாநிதி முதல்வராக இருந்த போதும் போராட்டங்கள் நடந்துள்ளன. பேச்சுவார்த்தை கள் நடைபெற்றுள்ளன. துறைவாரியான போராட்டங்கள் நடைபெறும்போதும்



முதலமைச்சர் கருணாநிதி அவர்களை அழைத்துப்பேசி முடித்துவைத்த வரலாறும் உண்டு.

இன்று ஆட்சியில் இருக்கும் முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி கடந்த நான்கு ஆண்டுகாலமாக அரசு ஊழியர்கள் - ஆசிரியர்




இயக்கங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தாதது மட்டுமல்ல, அவர்களை வாட்டி வதைத்து அலட்சியப்படுத்தி வரும் நிலையை அவர் மேற்கொண்டுள்ளது அவர் அரசு ஊழியர்களின் பலத்தை குறைவாகவே மதிப்பிடுகிறார் என்பதையே காட்டுகிறது. அரசு ஊழியர்களின் பலம் என்ன என்பதை அதை 2003 ல் உணர்த்தியது போல் மீண்டும் உணர்த்தவே அரசு ஊழியர்கள் சிறை செல்லும் போராட்டத்திற்கு தங்களை உட்படுத்திக் கொண்டுள்ளனர்.

மக்களை ஆட்சியாளர்கள் சந்திக்கும் தருணம்



வரும்போதெல்லாம் தங்களின் தவறுகளுக்கு பரிகாரம் காண ஆளும் அரசியல் கட்சிகள் முயல்வது வழக்கம். ஆனால் இன்று ஆட்சிப்பொறுப்பில் உள்ளவர்கள் தங்களின் தவறுகளையே சாதனையாக நினைத்துச் செயல்பட்டு வருகின்றனர். அரசு ஊழியர்கள் - ஆசிரியர்களை அழைத்துப் பேசக்கூட அவர்கள் தயாராக இல்லை.

இந்தத் தவறுக்கு அவர்கள் தண்டனை பெற்றே தீருவார்கள் என்பது கடந்த கால வரலாறு.



கடந்த ஒரு வாரகாலாமாக நடந்து வரும் மறியலும் சிறை நிரப்பும் போராட்டமும் அரசு ஊழியர் வரலாற்றில் புதிய அத்தியாயத்தை எழுதி வருகிறது. அரசின் அடக்குமுறைகள், காவல்துறை அராஜகங்கள் இவற்றை எல்லாம் மீறி பெரும்பாலான பெண் ஊழியர்கள் பங்கேற்று நடத்திக் கொண்டிருக்கும் இந்தப் போராட்டம்



உலகத்தின் கவனத்தை ஈர்த்துள்ளது.

இந்த நேரத்தில் அரசு ஊழியர்கள் அனைவரும் இந்தப் போராட்டம் வெற்றி பெற வேண்டியது எவ்வளவு அவசியம் என்பதை உணர்ந்து போராட்ட களத்தில் தங்கள் இன்னுயிரையும் துச்சமாக நினைத்து போராடுபவர்களை உற்சாகப் படுத்துவோம், ஊக்கப் படுத்துவோம், அவர்களுக்கு உறுதுணையாக நிற்போம்.

அரசு ஊழியர்கள் ஏன் போராட்டம் நடத்துகிறார்கள் என்று கேட்பவர்களுக்கு போராட்டத்தின் நியாயங்களை எடுத்துக் கூறுவோம்.

**- மாநில மையம்,**
**தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்.**

# "அண்ணே, நீங்க ரொம்ப அழகா இருக்கீங்க!"

**மை டியர் காம்ரேட்!**

உங்களை முன்பின் தெரியாத ஒருவர் நேரில் பார்த்து சார் நல்லா இருக்கீங்களா? குடும்பத்துல எல்லாரும் சௌக்கியமா? என்று கேட்டால் என்ன நினைப்பீர்கள்? அடுத்த கேள்வியாக ''அண்ணே நீங்க ரொம்ப அழகா இருக்கீங்க!'' என்று சொன்னால் உங்களுக்கு என்ன தோன்றும்? அதோடு நிறுத்தாமல் அந்த நபர், ''சகோதரரே உங்கள் வீட்டிலோ வீட்டைச்சுற்றிலோ ஏதாவது பிரச்னை இருக்கா? உங்களைப் பார்த்தால் அவற்றையெல்லாம் தீர்த்து வைக்கணும்னு தோணுது.'' என்று சொன்னால் உங்கள் மூளையில் என்ன பொறி தட்டும்? இத்தனை கேள்வி களுக்குப் பிறகு நீங்கள் அந்த நபரிடம் "அய்யா நீங்க வேற யாரோன்னு நினைச்சுகிட்டு என்கிட்டே பேசிக்கிட்டு இருக்கீங்கன்னு நெனக்கிறேன். நான் வாக்கிங் போயிட்டு கொஞ்சம் வெயிலில் உட்கார்ந்துட்டு எதிர்ல இருக்கற கடையில டீ சாப்பிட்டுவிட்டு போக லாம்னு வந்திருக்கேன்.'' என்று சொன்னால் அந்த நபர், "சார் நான் உங்களைப் பார்க்கத்தான் வந்திருக்கேன். இந்தாங்க இந்த அடையாள அட்டையை வச்சுக்கோங்க இதை இந்த எந்த ஏரியாவுல எந்த டீக்கடையிலும் ஓட்டலிலும் கொடுத்து டீ, காபி இலவசமாக சாப்பிட்டுக்க லாம்'' என்றால் அந்த நபரின் அதீத பாசத்தைப் பற்றி நீங்கள் என்ன நினைப்பீர்கள். இது வேறொன்றும் இல்லீங்க...தேர்தல் காலத்து திடீர் பாசம். இந்த பாசம் ரெண்டு அல்லது மூணு மாசம் மட்டும்தான். அதன்பிறகு அவர் எம்.எல்.ஏ. நீங்கள் யாரோ! இதுதான் இன்றைய காலத்தின் நிலை.

ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்பேன் என்று ஏழைகளுக்காக திட்டங்கள் தீட்டிய அறிஞர் அண்ணாவும், மதிய உணவு கொடுத்து மதி நுட்பம் வளர்ப்பேன் என்று ஏழை மாணவர்கள் கல்வி அறிவு பெற்று வாழ்வில் உயர்ந்திட வழி காட்டிய பெருந்தலைவர் காமராஜரும், நோயாளிகளுக்காக தன் வாழ்நாளை அர்ப்பணித்துக்கொண்ட அன்னை தெரசாவும், கேன்சர் நோய் மருத்துவ மனையில் எந்தவித பந்தாவுமின்றி தன் கடைசி காலம் வரை மருத்துவப் பணியாற்றிய டாக்டர் சாந்தாவும், ஏழைகளுக்காக குறைந்த செலவில் மருத்துவம் பார்க்கும் பெயர் தெரியாத பல மருத்துவர்களும் உள்ள இந்தநாட்டில் பொறுப்பான ஆட்சியாளர்களைக் காண முடியவில்லை. ஊழல் செய்யாத அரசியல் வாதிகளைப் பார்க்க முடியவில்லை. குற்றச்சாட்டுக்கு ஆளாகாத அமைச்சர் பெருமக்களை தேடமுடியவில்லை.

இன்றைய சமுதாயம் மானுடமும், மனிதமும் மறந்துபோகும் சமுதாயமாக மாறி வருகிறது. அன்பு என்ற சொல்லை அங்காடியில் தேட வேண்டிருக்கிறது. பாசம் என்ற சொல் பரண்மேல் போய்விட்டது. அடுத்தவனை ஏய்த்துப் பிழைப்பதும், எதிர்த்தால் அடித்துப் பறிப்பதும் இயல்பாக மாறி வருகிறது. நேர்மையாக, நியாயமாக செயல்படும் மனிதர்களுக்கும் இன்றைய சமுதாயம் வைத்திருக்கும் பெயர் "பிழைக்கத் தெரியாதவன்.'' பெரும்பான்மை செய்யும் தவறுகளுக்கு ஒத்துப்போகாதவன் "ஒழிக்கப்பட வேண்டியவன்''. இவர்களின் பொறுமையும், சகிப்புத் தன்மையும் சமுதாயத்தில் இவர்களுக்கு "இளிச்சவாயர்கள்'' என்ற பெயரை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது. இத்தனை புற அழுத்தங்களையும் சமாளித்து நேர்மையாளர் களாக பல பேர் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள் என்றால் அது கின்னஸ் சாதனையை மிஞ்சிய தாகும். அவர்களிடம் வறுமை இருக்கலாம், ஏழ்மை இருக்கலாம், ஆனால் தங்களால் இயன்ற உதவியை, சேவையை இந்த சமுதாயத்திற்கு செய்ய வேண்டும் என்ற அர்ப்பணிப்பு உணர்வு மட்டும் நிறைகுடம் போல நிறைந்து இருப்பது சாதாரண விஷயமல்ல. அவர்களின் நடவடிக்கை அவர்களை நம்பியிருப்பவர்களை சுற்றியிருப்பவர்களை பல சமயங்களில் சங்கடப்படுத்தவே செய்கின்றன, ஆனாலும் அதன் விளைவுகள் எத்தனை பொன் பொருள் கொடுத்தாலும் கிடைக்காத மகிழ்ச்சியையும் மனநிறைவையும் தருபவையாகவே இருக்கும்.

பெரிய தொழிலதிபர்கள், பணக்காரர்கள், ஏன் ஒரு பிரதம அமைச்சரிடம் கூட இல்லாத மானுடம் ஒரு செருப்பு தைக்கும் தொழிலாளியிடம் இருப்பதையும் தன் வறுமை நிலையிலும் தன்னால் முடிந்த உதவியை அவன் செய்வதையும் டால்ஸ்டாய் ஒரு கதை மூலம் சொல்கிறார்:

“பனி பொழியும் இரவு, செருப்புத் தைக்கும் தொழிலாளி சைமன் தன் வீட்டுக்கு நடந்து சென்றுகொண்டிருந்தார். அன்றைய தினம் அவருக்கு வருமானம் எதுவும் கிடைக்கவில்லை. அதனால் அவர் முகம் வருத்தத்தில் தோய்ந் திருந்தது. வருத்தத்திற்கு காரணம் காலையில் வீட்டை விட்டு கிளம்பும் போது தன் மனைவி யிடம் அவர் கொடுத்திருந்த உறுதிமொழியான ’இன்று இரவு நிச்சயம் நல்ல தடிமனான ஒரு தோல் ஆடையை வாங்கிக் கொண்டுதான் வீடு திரும்புவேன்.’ என்பதை நிறைவேற்ற முடியாமல் போய்விட்டதே என்பதுதான்.

அதைப்பற்றி யோசித்துக் கொண்டேஒரு திருப்பத்தைக் கடந்து சென்றபோது தொலைவில் மரத்தடியில் ஒரு மனிதர் இரு கைகளையும் கட்டிக்கொண்டு வெடவெடவென்று குளிரில் நடுங்கியபடி நின்று கொண்டிருந்தார். சைமன் பார்வையை விலக்கிக் கொண்டு தன் வழியில் நடக்கத் தொடங்கினார். ஆனால் மனம் கேட்கவில்லை. மீண்டும் திரும்பி வந்து அந்த மனிதரை நெருங்கினார். பதில் அளிக்க முடியாத அளவுக்கு குளிரில் நடுங்கிக் கொண்டிருந்த அந்த நபருக்கு தன் மேலங்கியைக் கழற்றிக் கொடுத்தார் சைமன். அதை வாங்கி போர்த்திக் கொண்டபின் அந்த நபரின் நடுக்கம் சற்று குறைந்தது. ஆனாலும் அவர் முகத்தில் களையே இல்லை. ஓ, ஒழுங்கான ஆடைகூட இல்லாத இவர் எப்போது கடைசியாக உண்டிருப்பாரோ தெரியவில்லையே என்று முணுமுணுத்தபடி அவரையும் தன்னோடு வீட்டுக்கு அழைத்துச் சென்றார் சைமன்.

தன் கணவர் நடந்து வருவதை வீட்டு ஜன்னலிலிருந்து பார்த்துக்கொண்டிருந்த மத்ரியோனா சிடுசிடுத்தார். இன்றும் அவர் தோல் ஆடை வாங்கிவரவில்லை என்பது மட்டுமல்ல அவர் சிடுசிடுப்புக்கு காரணம், கூடவே இன்னொருவரையும் அழைத்துக் கொண்டுமல்லவா வருகிறார். உணவு உண்ணும் வேளையில் இப்படியா விருந்தினரை அழைத்துக் கொண்டு வருவது? என்று பொருமியபடி வாசற்கதவை திறந்தவரின் முகம் சுருங்கியது. என்ன இந்த சைமன், தன்னுடைய அங்கியையும் விருந்தினருக்கு கழற்றிக்கொடுத்து விட்டாரா? என்று மனதிற்குள் முனகிய படியே சமையலறைக்குச் சென்று இரண்டு தட்டுகளை எடுத்துக் கொண்டு வந்து வைத்தார். இருக்கும் ரொட்டித் துண்டுகளை இருவருக்கும் பகிர்ந்து கொடுத்துவிட்டு அவர்கள் முன்பு அமர்ந்து கொண்டார். மத்ரியோனாவின் உதடுகள் ஏமாற்றத்திலும் பசியிலும் துடிக்க ஆரம்பித்தன.

ஆனால் வந்த மனிதரோ எந்தக் கவலையும் இன்றி தன் முன் வைக்கப்பட்டிருநத் ரொட்டியை ஆர்வத்தோடு கையில் எடுத்து, ரொட்டியை விண்டு வாயில் போட்டுக்கொண்டார். அதுவரை அவரை வருத்திக் கொண்டிருந்த நடுக்கம். அந்தக் கணமே நின்றுவிட்டது. அவர் தன் கண்களை மூடிக்கொண்டார். வாயில் விழுந்த விள்ளல் அவருடைய நாவில் நெகிழ்ந்து கரைய ஆரம்பித்தது. “ஆஹா அற்புதம்’ என்றார் அவர். அவருடைய கண்களின் ஓரங்களிலிருந்து கண்ணீர்த் துளிகள் புறப்பட்டு வருவதை மத்ரியோனா கவனித்தார். அந்தக் கண்ணீர் அவரை ஏதோ செய்து கோபமும் ஆற்றாமையும் இருந்த இடத்தை வேறு ஏதோ ஒன்றினால் நிரப்புவதை உணர்ந்தார். கொல்லும் குளிர் விலகி, இதமான வெப்பக்காற்று அணைத்துக்கொண்டது போலிருந்தது. மத்ரியோனாவின் முகத்தில் ஒரு புன்னகை அரும்பியது.’’

இந்த இடத்தில் கதையை நிறுத்திவிட்டு டால்ஸ்டாய் நம்மிடம் ஒரு கேள்வி கேட்கிறார், “கோபமும், பசியும், பொருமலும் காட்டிய மத்ரியோனா இப்போது ஏன் புன்னகை செய்தார்? அந்தப்புன்னகையின் பொருள் என்ன?’’

“நான் இன்றுவரை என் வாழ்நாளில் திரட்டிய அனுபவங்கள், எழுதிய ஆயிரக்கணக்கான புத்தகங்கள், கரைத்துக் குடித்த தத்துவ விசாரணைகள், மேற்கொண்ட நீண்ட பயணங்கள், மலைபோல் சேர்த்து வைத்திருந்த செல்வம் அத்தனையும் ஒன்று திரட்டி அந்தப் புன்னகையின் மீது பாய்ச்சினேன். என்னை அணுக இவை எதுவும் தேவையில்லை என்றது அந்தப் புன்னகை.’’ என்கிறார்.

“அந்தப் புன்னகை பனியின் தூய்மை, கதிரவனின் ஒளி, மலரின் வாசம், மழையின் சிலிர்ப்பு, குழந்தையின் இதயம் இவற்றைப்போல் அப்பழுக்கில்லாதது. இன்னலுறுபவரைக் கண்டால் இரங்கும் இதயம் கொண்ட சைமனின் அங்கியை நான் என் தோளில் எடுத்துப் போட்டுக்கொண்டேன், அது இன்னும் என் தோளில் புரண்டு கொண்டிருக்கிறது. மத்ரியோனா கொடுத்த ரொட்டித்துண்டில் ஒரு விண்டு எடுத்து என் வாயியில் போட்டுக் கொண்டேன் அது என் பசியைப் போக்கியது. தன்னுடைய பசி, கோபம், ஆற்றாமை இவற்றையெல்லாம் மீறி பசி தீர்ந்தவரின் கண்களில் வழிந்த கண்ணீரைப்

பார்த்ததும் மத்ரியோனாவின் உதடுகளில் வெளிப்பட்ட புன்னகை சாதாரணமானதல்ல, சக்தி வாய்ந்தது. எந்த அளவுக்கு என்றால் நத்தையைப் போல் சுருண்டுகிடந்த என் இதயத்தை கடல் அளவுக்கு விரித்துப் போட்டுவிட்டது அது.'' என்று கூறும் டால்ஸ்டாய் அந்தக் கதையை இவ்வாறு முடிக்கிறார், ''மகனே உணர்ந்ததால் சொல்கிறேன். மத்ரியோனாவின் ரொட்டியைவிடவும் சுவையானது இந்த உலகில் வேறு இல்லை. உலகிலுள்ள அனைவருடைய பசியையும் போக்கும் வல்லமை கொண்ட அந்த ரொட்டித் துண்டை உன்னோடு பகிர்ந்து கொள்கிறேன். அதை ஒவ்வொரு மனிதனுக்கும் கொண்டுசெல். மத்ரியோனாவின் புன்னகை உன்னை நிறைக்கட்டும்.''

அரசின் அடக்கு முறைகளுக்கும், அலுவலகக் குறிப்பாணைகளுக்கும், ஏன் குற்றக் குறிப்பாணை கொடுக்கும் அதிகாரியின் உரிமைக்காகவும் சேர்த்து போராட்டக் களத்தில் நிற்கும் ஒவ்வொரு தோழரின் பொறுமையும் சகிப்புத் தன்மையும் மத்ரியோனாவின் புன்னகைக்கு ஈடானது என்றால் அது மிகையில்லை.

தோழர்களே, ''உங்கள் வீட்டில் 18 வயதிற்கு மேற்பட்டவர்கள் எத்தனை பேர்?'' ''அண்ணே நீங்க ரொம்ப அழகா இருக்கீங்க!'' என்று கேட்டு உங்களை நாடிவரும் நபர்களுக்காக சைமனின் அங்கியோடும், மத்ரியோனாவின் புன்னகையோடும் தயாராக இருங்கள்.

**-ஜிஜி**

# நமக்கான ஆடுகளத்தில்.. கை கோர்ப்போம்...

மேகம் இருளும்...
மின்னல் பளிச்சிடும்
இடி மிரட்டும்... இது ஒரு
மழைக்காலம்....!

கொடி பறக்கும்!
கோஷம் விண்ணதிர... எழுப்பும்!
அலையலையாய்... கூட்டம்...
ஆர்ப்பரிக்கும் ...!

உரிமைக்கான கீதங்கள்
செவிடர் காதை கிழிக்கும்...!
அது எங்கும் ஒலிக்கும்...!

இது போர்க்களம்
அரசுக்கு பொல்லாத காலம்...!

அதனால்தான்
ஒன்றை அறிவித்துவிட்டு
ஒன்பதை விட்டுவிடுகிறது...

அரசே....
அலையும் ஓயாது
போராட்டமும் ஓயாது...!

ஒன்றை அறிவித்துவிட்டு
ஒரு கூட்டத்தை
ஓரம் கட்டி விடலாம்
என்ற உம் கனவு...
பகல் கனவாகவே போய்விடும்....!

நாங்கள் செவிடர்கள் அல்ல...
கேட்க மறுக்க...!

நாங்கள்
குருடர்கள் அல்ல
நல்லது கெட்டது பார்க்க மறுக்க...!

நாங்கள்
ஊமைகள் அல்ல
உங்களோடு பேச மறுக்க....!

உலகத்தின் உன்னதமான செயல்
பேசி தீர்ப்பது...!

அரசே...
அதற்காக யோசி...
இல்லையேல்...

நெறுங்கி வருகிறது...
காலமும் களமும்... உமக்கான பாடம் கற்பிக்கும்...!

இல்லையேல் எங்களால் இயன்றதை
இப்போதிருந்தே
துவங்கிவிடுகிறோம்.....!

தோழமையே...
நமக்கான ஆடு களத்தில்...
நாம் கை கோர்போம்...

**- புதுகை பூவண்ணன்**

# மதுரையில் மாநில அளவிலான போராட்ட ஆயத்த மாநாடு

மாநில அளவிலான போராட்ட ஆயத்த மாநாடு மதுரையில் 27.01.2021 அன்று நடைபெற்றது. இந்நிகழ்வில் திமுக தலைவர் மு.க.ஸ்டாலின், மார்க்சிஸ்ட் கட்சி மாநிலச் செயலாளர் கே.பாலகிருஷ்ணன், விடுதலை சிறுத்தைகள் கட்சித்தலைவர் தொல்.திருமாவளவன், காங்கிரஸ் கட்சியின் சார்பில் கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் காணொலி வாயிலாக உரையாற்றினர்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான மு.க.ஸ்டாலின், மதுரையில் நடைபெற்ற தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாநில அளவிலான போராட்ட ஆயத்த மாநாட்டில் காணொலி வாயிலாகக் கலந்துகொண்டு உரையாற்றினார்.

அப்போது அவர் ஆற்றிய உரையின் விவரம் வருமாறு:

"தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில மையத்தின் சார்பில் நடைபெறும் மாநாட்டில் பங்கேற்று சில கருத்துகளைச் சொல்வதற்கு வாய்ப்பளித்த அரசு ஊழியர் சங்கத்தின் தலைவர்கள் அனைவருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். வழக்கமான மாநாடாக இல்லாமல், போராட்டத்துக்கான ஆயத்த மாநாடாக இதனைக் கூட்டி இருக்கிறீர்கள்.

'இழந்ததை மீட்டிட, இருப்பதைக் காத்திட' என்ற உங்களது அறிவிப்பிலேயே அனைத்தும் அடங்கிவிட்டது. இன்றைய அ.தி.மு.க. அரசு, அரசு ஊழியர்களின் அனைத்து உரிமைகளையும் பறித்துவிட்டது, இனிமேல் பறிப்பதற்கு எதுவும் இல்லை என்பதைச் சொல்லாமல் சொல்லி இருக்கிறீர்கள்!

தமிழ்நாடு வருவாய் அலுவலர் சங்கம், ஊரகவளர்ச்சி அலுவலர் சங்கம், வணிகவரிப் பணியாளர் சங்கம், தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்கம் உள்ளிட்ட பல்வேறு சங்கத்தினர் அனைவரும் சேர்ந்து, 'உரிமை மீட்பு வெறும் பேரல்ல, புனிதப் போர்' என்று அறிவித்துள்ளீர்கள்.

உங்களது கோரிக்கைகளை நான் பார்த்தேன்.

* பழைய ஓய்வூதிய திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும்.

* போராட்டத்தில் பங்கேற்றவர்கள் மீது ஏற்படுத்தப்பட்ட குற்றக் குறிப்பாணையை நீக்க வேண்டும்.

* மாநிலத் தலைவர் மு.சுப்பிரமணியம் போன்றவர்கள், பணி ஓய்வின் போது தற்காலிகமாகப் பணி நீக்கம் செய்யப்பட்டதை ரத்து செய்ய வேண்டும்.

* 21 மாத கால நிலுவைத் தொகையை வழங்க வேண்டும்.

* முடக்கப்பட்ட அகவிலைப்படியைத் தர வேண்டும்.

* பறிக்கப்பட்ட சரண்டர் உரிமையை வழங்க வேண்டும்.

* சத்துணவு மற்றும் அங்கன்வாடி, வருவாய் கிராம உதவியாளர்கள், ஊர்ப்புற நூலகர்கள், எம்.ஆர்.பி.



செவிலியர்கள் உள்ளிட்ட சிறப்பு காலமுறை ஊதியம், தொகுப்பூதியம், மதிப்பூதியம் பெறும் மூன்றரை லட்சம் ஊழியர்களுக்கு வரையறுக்கப்பட்ட கால முறை ஊதியம் வழங்க வேண்டும்.

* 2002ஆம் ஆண்டு பணி நீக்கம் செய்யப்பட்ட சாலைப் பணியாளர்களுக்கு 41 மாத காலப் பணிக்கான ஊதியம் தர வேண்டும் என்ற கோரிக்கைகள் அனைத்திற்கும் தார்மீக அடிப்படையில் எனது ஆதரவைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழக அரசு அமைந்ததும் இக்கோரிக்கைகள் அரசால் பரிசீலிக்கப்பட்டு, உரிய நிவாரணம் வழங்கப்படும் என்ற உறுதிமொழியையும் இந்த மாநாட்டின் மூலமாக அரசு ஊழியர்கள் அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் வாழ்க்கைக்கு ஒளியேற்றிய ஆட்சிதான் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி!

* அரசு அலுவலர்கள் நடத்தை பற்றிய ரகசியக் குறிப்பேட்டை நீக்கியவர் கலைஞர்!

* அரசு ஊழியர் குடும்பப் பாதுகாப்பு நிதி வழங்கியவர் கலைஞர்!

இந்தக் கருணைக் கொடையை இந்தியாவிலேயே வழங்கிய முதல் அரசு கழக அரசுதான்!

* அரசு ஊழியர்கள் பணிக்காலத்தில் இறந்தால், அவர்களின் வாரிசுகளுக்கு கருணை அடிப்படையில் பணி வழங்கியதும் கழக அரசுதான்!

* ஈட்டிய விடுப்பை சரண்டர் செய்து பணமாகப் பெறும் திட்டத்தை அமல் செய்தவர் கலைஞர்!

* திருமணக் கடன், வாகனக் கடன், வீடுகட்டக் கடன் ஆகியவை வழங்கியவர் கலைஞர்!

* மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் கொடுத்தார்.

* 6 மாதத்துக்கு ஒரு முறை, மத்திய அரசு ஊழியர்களுக்கு பஞ்சப்படி உயர்த்தும் போதெல்லாம், மாநில அரசு ஊழியர்க்கும் வழங்கியவர் கலைஞர்!

* பொங்கல் கருணைத் தொகையை போனசாக வழங்கிய ஆட்சி திமுக ஆட்சி!

* ஒளிவுமறைவற்ற கலந்தாய்வு நடத்தி, பணி மாறுதல்கள் வழங்கியது கழக ஆட்சி!

* அரசுப்பணியில் சேருவதற்கான வயது வரம்பை உயர்த்தியது கழக அரசு!

* 10 ஆயிரம் சாலைப் பணியாளர்களை நியமித்ததும், 7 ஆயிரம் மக்கள் நலப்பணியாளர்களை நியமித்ததும் கழக அரசு தான்.

* பண்டிகை முன்பணத்துக்கு வட்டியை நீக்கிய அரசு கழக அரசு!

* 2 லட்சம் சத்துணவுப் பணியாளர்களுக்கு காலமுறை ஊதியம் வழங்கிய ஆட்சி கழக ஆட்சி!

* ஓய்வுக்கால பணிக்கொடை உச்சவரம்பை உயர்த்திய அரசு கழக அரசு!

* தமிழாசிரியர் பணியிடப் பாகுபாடு நீக்கப்பட்டது. புலவர் பட்டம் பி.லிட். பட்டம் ஆக்கப்பட்டது.

* 'நல்லாசிரியர் விருது', 'டாக்டர் ராதாகிருஷ்ணன் விருது' ஆனது.

* மத்திய அரசுக்கு இணையான சம்பள விகிதங்கள் மாநில அரசு ஊழியர்கள், ஆசிரியருக்குத் தரப்பட்டன.

இப்படி அரசு ஊழியர், ஆசிரியர்களுக்கு கழக ஆட்சியில் வழங்கப்பட்ட சலுகைகளைச் சொல்லிக் கொண்டே போகலாம்!

அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் ஒரு மாநிலத்தின் அடிநாதம் என்பதை தி.மு.க. அரசு எந்தக் காலத்திலும் மறந்தது இல்லை. அரசு ஊழியர்கள்தான் அரசாங்கத்தை வழிநடத்துகிறார்கள். மக்களுக்குப் போய்ச்சேர வேண்டிய அனைத்துத் திட்டங்களையும் மக்களுக்குக் கொண்டு சேர்ப்பவர்களும் அவர்கள்தான்.

ஆசிரியர்களைப் பொறுத்த வரை, அவர்களது பணி என்பது தொண்டு. அதனை வேலை என்று சொல்ல முடியாது. தியாகப் பணி. எதிர்காலத் தலைமுறையை உருவாக்குபவர்கள்தான் ஆசிரியர்கள். இந்தியாவின் சொத்தான இளைய சக்தியை உருவாக்குபவர்கள் ஆசிரியர்கள். எனவேதான் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் நலனில் எப்போதும் அக்கறை



செலுத்தும் அரசாக கழக அரசு இருந்தது. எதிர்காலத்திலும் அப்படித்தான் இருக்கும்!

அ.தி.மு.க. ஆட்சியானது, அரசு ஊழியர்களை ஆசிரியர்களை மதித்ததா என்றால் இல்லை! அவர்களது கோரிக்கைகளைச் செவி மடுத்ததா என்றால் இல்லை! அரசு ஊழியர்கள் கடந்த மூன்று ஆண்டுகளாக பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து பல்வேறு போராட்டங்களை நடத்தி வருகிறார்கள். அதை அரசு கண்டுகொள்ளவில்லை.

2018ஆம் ஆண்டு அரசு ஊழியர்கள் உண்ணாவிரதம் இருந்தபோது சட்டமன்றத்தில் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்து நான் பேசினேன். பரிசீலிப்பதாக அரசு சொன்னது. கடந்த ஆண்டு ஜனவரி மாதம், தங்கள் கோரிக்கைகளை முன் வைத்து அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் போராட்டம் நடத்தினார்கள். கோரிக்கைகளைக் கவனிக்கிறோம் என்று அரசு சார்பில் சொன்னதால் பணிக்குத் திரும்பினார்கள். ஆனால் 23 மாதம் ஆகிவிட்டது. அரசு எதுவும் செய்யவில்லை.

ஆனால் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் மீது குற்றக் குறிப்பாணை போட்டுள்ளது அரசு. இதனால் அவர்களது பதவி உயர்வு, ஊதிய உயர்வு, ஓய்வுக்காலச் சலுகைகள் பாதிக்கப்படுகிறது. இன்னும் பலர் மீது எஃப்.ஐ.ஆர். பதிவு செய்யப்பட்டுள்ளது. இதுதான் அரசு ஊழியர்களை மதிக்கும் லட்சணமா?

கடந்த செப்டம்பர் மாதமும் தமிழகச் சட்டமன்றத்தில் இவர்களது கோரிக்கைகள் குறித்து அரசின் கவனத்தை ஈர்த்தேன். இதுவரை தமிழக அரசு அசையாமல் கல் நெஞ்சத்தோடு இருக்கிறது. இந்தக் கொரோனா காலத்தில் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் எத்தகைய நெருக்கடியுடன் பணியாற்றினார்கள், பணியாற்றி வருகிறார்கள் என்பது அனைவருக்கும் தெரியும். நம்மை விட அரசுக்கு நன்றாகத் தெரியும்.

கொரோனா காலத்து நிவாரணப் பணிகளுக்காக அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் சுமார் 13 லட்சம் பேர் தங்களது ஒரு நாள் ஊதியமாக சுமார் 150 கோடி ரூபாயை முதலமைச்சரின் பொதுநிவாரண நிதிக்கு வழங்கினார்கள். இப்படி அரசின் செயல்பாடுகளுக்கு ஒத்துழைத்து வரும் அரசு ஊழியர்கள், ஆசிரியர்களை இந்த அரசு ஏன் மதிக்கவில்லை? இந்த அலட்சியத்துக்கு என்ன காரணம்? தான் ஒருவர்தான் அரசாங்கம் என்று நினைக்கிறாரா பழனிசாமி? ஊழியர்கள் இல்லாமல் அரசாங்கத்தை அவரால் நடத்த முடியுமா?

அரசு ஊழியர்கள் போராடிய போது, அவர்களுக்கு அதிகமான சம்பளம் தரப்படுகிறது, ஏராளமான சலுகைகள் தரப்படுகிறது என்று சொன்னவர் முதலமைச்சர் பழனிசாமி. அதைவிடக் கொடுமையாக, அரசு ஊழியர்கள் எவ்வளவு சம்பளம் வாங்குகிறார்கள் என்பதை வெளிப்படையாக அரசு சார்பில் பொதுவெளியில் வெளியிட்டது பழனிசாமி அரசு.

'ஒரு ஆரம்பப் பள்ளி தலைமையாசிரியர் என்ன ஊதியம் வாங்குகிறார். எம்.இ. படித்த இளைஞர் எவ்வளவு ஊதியம் வாங்குகிறார்' என்று சொல்லி, ஆரம்ப பள்ளி ஆசிரியர்களைக் கிண்டல் செய்தார் பழனிசாமி. 'தேர்வில் வெற்றி பெற வேண்டாத வகுப்புக்கு தலைமையாசிரியராக இருப்பவர்க்கு, எதற்காக இவ்வளவு சம்பளம்?' என்று கேட்டவர் பழனிசாமி.

'ஆசிரியர்களுக்கு இவ்வளவு விடுமுறை இருக்கும் போது, எதற்காக இவ்வளவு சம்பளம்?' என்றும் முதலமைச்சர் கேட்டார். ''எல்லாப் பணத்தையும் இவர்களுக்கே கொடுத்துவிட்டால், மக்களுக்கு எங்கே நன்மை செய்ய முடியும்?' என்று கேட்டவர் இந்த பழனிசாமி.

இதன் மூலமாக என்ன சொல்ல நினைத்தார்கள் என்றால், அரசு ஊழியர்களின் போராட்டம் அநியாயமானது, அவர்கள் அதிக ஊதியம் வாங்குகிறார்கள் என்று பொதுமக்களிடம் காட்ட நினைத்தது பழனிசாமி அரசு. இதைப் போல மோசமான சிந்தனை வேறு எதுவும் இருக்க முடியாது.

ஊழலுக்குப் பேர் போனது இந்த அ.தி.மு.க. அரசு. லஞ்ச லாவண்யத்தில் திளைப்பது இந்த அரசு. முதலமைச்சர் முதல், அமைச்சர்கள் வரை ஊழல் புகாருக்கு உள்ளாகி இருக்கிறார்கள். டெண்டர்கள் மூலமாக அரசாங்க கஜானாவை கொள்ளை அடித்துக் கொண்டு இருக்கிறார்கள். ஆனால் அரசு ஊழியர்களின் கோரிக்கையைச் செவி மடுத்துக் கேட்கக் கூட பழனிசாமி அரசாங்கம் தயாராக இல்லை.

மூன்று வேளாண் சட்டங்களுக்கு எதிராகப் போராடும் விவசாயிகளை அழைத்து பிரதமர் பேச மாட்டார். அந்த அளவுக்கு பிடிவாதமாக பிரதமர் இருப்பதைப் போலத் தான், முதலமைச்சர் பழனிசாமியும் உங்களை அழைத்துப் பேச்சுவார்த்தை நடத்தாமல் இருக்கிறார்.

பிப்ரவரி 2 ஆம் தேதி முதல் தொடர் மறியல் போராட்டம் நடத்த இருப்பதாகவும், அது சிறை நிரப்பும் போராட்டமாக இருக்கும் என்றும் நீங்கள் அறிவித்துள்ளீர்கள். உங்கள் போராட்டத்தை தார்மீக அடிப்படையில் நாங்கள் ஆதரிக்கிறோம். கழக ஆட்சி அமைந்ததும், அரசு ஊழியர்கள் சங்கங்களை அழைத்துப் பேசி நல்ல முடிவுகளை எடுப்போம் என்பதைச் சொல்லி, உங்களை வாழ்த்தி விடை பெறுகிறேன்." இவ்வாறு அவர் உரையாற்றினார். ■

# ஒரு விண்ணப்பம்!

**அரசு ஊழியர்களே! ஆசிரியர்களே!**

உங்களுக்கு
போராட்டத்தில்
விருப்பமில்லாமல்
இருந்தால்,
அரசாங்கத்தின்
அடக்குமுறைகளை
எதிர்த்துப் போராட
அழைக்கும் தோழனை
வசைமாரிப் பொழியுங்கள்!

காது கொடுத்து
கேட்கமுடியாத
வார்த்தைகளால்
கொச்சைப் படுத்துங்கள்!

எதிர்வினையே புரியாமல்
உங்களை
போராடக் கெஞ்சும்
அவனை
நையப் புடையுங்கள்!

அதன்பிறகும் அவன்
வருவானென்னு
தெரிந்தால்
பிச்சுவா கத்தி
கொண்டுவந்து
முதுகில் குத்துங்கள்!

அல்லது ஆசிட்
ஊற்றியேனும்
அவன் வருகையை
தடுக்கப்பாருங்கள்!

அதற்கெல்லாம்
உங்களுக்கு
தைரியமில்லையெனில்
ஆள் வைத்து மிரட்டுங்கள்;
பில்லி சூனியம் செய்தாவது
விரட்டுங்கள்!



இவையெதுவும்
பொருந்தவில்லையெனில்
அவன் சபலமறிந்து
இரயிலிலேற்றித்
தள்ளிவிடுங்கள்;
படகிலேற்றி
மூழ்கடியுங்கள்;
கயிறு கட்டி
தூக்கிலிடுங்கள்!

இவற்றையெல்லாம்
முயற்சித்தும்
ஒன்றினாலும்
பயனில்லாத பட்சத்தில்
யாருக்கும் தெரியாமல்
கருணைக்
கொலைக்கேனும்
முயற்சி செய்யுங்கள்!

ஒருவேளை அவன்
அதன்பிறகும்
உயிரோடு
தொடர்ந்திருப்பானெனில்...

தயவு செய்து
இறுதியிலும் இறுதியாக
அவன் அழைக்கும்
அரசு ஊழியர்க்கான
ஆசிரியர்க்கான
உரிமைப்
போராட்டத்தில்
கலந்து கொண்டு
உங்கள் அத்தனை
கோபத்தையும்
அர்த்தமுள்ளதாக
ஆக்குங்கள்.

\- ஜிஜி

**தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்**
மாநில மையம்

# ஜாக்டோ-ஜியோ (JACTTO-GEO)

**(Joint Action Council of Tamilnadu Teachers Organisations and Government Employees Organisations)**

# 72 மணி நேரம் உண்ணாவிரதம்

நீண்ட காலமாக நிலுவையில் உள்ள பல்வேறு கோரிக்கைகளை நிறைவேற்றிட வலியுறுத்தி ஜாக்டோ ஜியோ சார்பாக அனைத்து ஒருங் கிணைப்பாளர்களும் பிப்ரவரி 8, 9 மற்றும் 10 ஆகிய தேதிகளில் 72 மணி நேரம் உண்ணாவிரதம் மேற்கொள்வது என முடிவெடுக்கப்பட்டதன் அடிப்படையில் 8.2.2021 அன்று சென்னை சேப்பாக்கம் எழிலகம் வளாகத்தில் உண்ணா விரதம் மேற்கொள்ள வந்தபோது அவர்கள் வலுக்கட்டாயமாக கைது செய்யப்பட்டு வாகனத்தில் ஏற்றிச் செல்லப்பட்டனர்.

மேலும் உண்ணாவிரதம் நடைபெறவிருந்த மேடை மற்றும் பந்தல் பிய்த்தெறியப்பட்டது. அன்று நள்ளிரவு விடுவிக்கப்பட்ட நிலையில் 9.02.2021 காலை 9 மணிக்கு மீண்டும் கைது செய்யப்பட்டனர். மீண்டும் மீண்டும் தமிழக அரசினுடைய அராஜகமான போக்கினைக் கண்டித்து தொடர்ச்சியாக ஒருங்கிணைப்பாளர் உண்ணாவிரதம் மேற்கொண்டிருந்தனர். மேலும் 10.2.2021 அன்று 3ஆம் நாள் சென்னை சேப்பாக்கம் எழிலகம் வளாகத்திலேயே உண்ணாவிரதத்தை தொடர்ந்தனர்.

அனைத்து மாவட்டத் தலைநகரங்களில் 8, 9 மற்றும் 10 ஆகியதேதிகளில் கோரிக்கைகளை நிறைவேற்றிடக் கோரியும், ஒருங்கிணைப்பாளர் கள் கைது செய்யப்பட்டதை கண்டித்து மாலை நேர ஆர்ப்பாட்டம் மிக எழுச்சியாக நடைபெற் றது. நிலுவை கோரிக்கைகள் மீது முதலமைச்சர் அழைத்துப் பேசி தீர்வு காண அறவழியிலான உண்ணாவிரதப் போராட்டத்தினைக்கூட தமிழக அரசு தடை செய்து ஜாக்டோ ஜியோ தலைவர் களை கைது செய்து அராஜக நடவடிக்கையில் ஈடுபட்டது. இப்போக்கினை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் வன்மையாக கண்டிக்கிறது. 72 மணி நேர உண்ணாவிரதப் போராட்டம் 10.2.2021 அன்று மாலை முடிவடைந்த நிலையில் அதுவரை தமிழக அரசு அழைத்துப் பேசாத காரணத்தினால் மீண்டும் ஜாக்டோ ஜியோ தலைவர்கள் ஒன்றுகூடி அடுத்த கட்டமாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து பேசவுள்ளனர்.

## காவல் துறை அராஜகம்

எனது ஆட்சியில் எத்தனை போராட்டங்கள் நடைபெற்று உள்ளன என்று சட்டமன்றத்தில் எண்ணிக்கை பெருமை பேசிய எடப்பாடி தலைமையிலான காவல்துறை தான் ஜனநாயக ரீதியாக சென்னையில் நடைபெற்ற ஜாக்டோ ஜியோவின் உண்ணாவிரதப் பந்தலை கலைத்து ஒருங்கிணைப்பாளர்கள் அனைவர் மீதும் தடியடி நடத்தி கைது செய்தது.



# துறைவாரி சங்க நிகழ்வுகள்

**தமிழ்நாடு வருவாய்துறை அலுவலர் சங்கம்**

சங்கத்தின் ஓசூர் மத்திய செயற்குழு முடிவின்படி புதிய ஓய்வூதிய திட்டம் ரத்து செய்தல், அகவிலைப்படி, சரண்டர் விடுப்பு வழங்குதல் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் சார்பில் 02.02.2021 முதல் நடைபெறவுள்ள மறியல் மற்றும் சிறை நிரப்பும் போராட்டத்தில் வருவாய்த்துறை அலுவலர்கள் பங்கேற்பது என தீர்மானிக்கப்பட்டது.

**தமிழ்நாடு அரசு கூட்டுறவுத்துறை ஊழியர் சங்கம்**

சங்கத்தின் மாநில செயற்குழு கூட்டம் 30.01.2021 அன்று திருச்சி, தில்லைநகர் மக்கள் மன்றத்தில் மாநிலத் தலைவர் எம். சௌந்தரராஜன் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நிலுவைக் கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் சார்பில் 02.02.2021 முதல் நடைபெறவுள்ள மறியல் மற்றும் சிறை நிரப்பும் போராட்டத்தில் கூட்டுறவுத்துறை ஊழியர் சங்கத்தின் சார்பில் பெருந்திரளாக பங்கேற்பது என தீர்மானிக்கப்பட்டது.

**தமிழ்நாடு வேளாண்மைத்துறை அமைச்சுப்பணியாளர் சங்கம்**

சங்கத்தின் மாநில செயற்குழு கூட்டம் 30.01.2021 அன்று விழுப்புரத்தில் மாநிலத் தலைவர் இரா. பன்னீர்செல்வம் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நிலுவைக் கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் சார்பில் 02.02.2021 முதல் நடைபெறவுள்ள மறியல் மற்றும் சிறை நிரப்பும் போராட்டத்தில் வேளாண்மைத்துறை அமைச்சுப் பணியாளர் சங்கத்தின் சார்பில் பெருந்திரளாக பங்கேற்பது என தீர்மானிக்கப்பட்டது.

**தமிழ்நாடு மருத்துவத்துறை நிர்வாக ஊழியர் சங்கம்**

சங்கத்தின் நிர்வாகிகள் கூட்டம் 28.01.2021 அன்று மதுரையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நிலுவை கோரிக்கைகளை வலியுறுத்தி இழந்ததை மீட்டிட, இருப்பதை காத்திட பிப்ரவரி-2 முதல் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் சார்பில் நடைபெற உள்ள மறியல் மற்றும் சிறை நிரப்பும் போராட்டத்தில் மருத்துவத்துறை ஊழியர்கள் பெரும்திரளாக கலந்துக்கொள்வது என முடிவாற்றப்பட்டது.

**தமிழ்நாடு நகராட்சி, மாநகராட்சி அலுவலர் சங்கம்**

சங்கத்தின் மாநில நிர்வாகிகள் கூட்டம் 17.01.2021 ஞாயிறு அன்று காலை 11 மணியளவில் காணொலி வாயிலாக நடைபெற்றது. இக்கூட்டத்தில் நகராட்சி, மாநகராட்சி ஊழியர்களை அரசு ஊழியர்களாக அறிவித்து அரசு கருவூலம் மூலம் ஊதியம் வழங்க வேண்டும், புதிய ஓய்வூதியத் திட்டத்தை ரத்து செய்து பழைய ஓய்வூதிய திட்டத்தை அமுல்படுத்தவேண்டும், 21 மாத நிலுவை தொகையினை வழங்கிட வேண்டும், அரசு துறைகளில் காலிப்பணியிடங்களை நிரப்பிட வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி 02.02.2021 முதல் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் சார்பில் நடைபெறவுள்ள மறியல் மற்றும் சிறை நிரப்பும் போராட்டத்தில் நகராட்சி , மாநகராட்சி அலுவலர்கள் பெருந்திரளாக பங்கேற்பது என தீர்மானிக்கப்பட்டது.

**தமிழ்நாடு அரசு மருத்துவ ஆய்வக நுட்பனர் சங்கம்**

சங்கத்தின் மாநில செயற்குழு கூட்டம் 31.01.2021 சேலம், ஹோட்டல் சௌடாம்பிகை கூட்ட அரங்கில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நிலுவை கோரிக்கைகளை வலியுறுத்தி இழந்ததை மீட்டிட, இருப்பதை காத்திட பிப்ரவரி-2 முதல் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் சார்பில் நடைபெற உள்ள மறியல் மற்றும் சிறை நிரப்பும் போராட்டத்தில் மருதுதுவ ஆய்வக நுட்பனர்கள் கலந்துக்கொள்வது என முடிவாற்றப்பட்டது.

**ஊரக வளர்ச்சித்துறை அலுவலர்கள் சங்கம்**

10 அம்சக் கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தி தமிழ்நாடு ஊரக வளர்ச்சித்துறை அலுவலர்கள் சங்கத்தின் தருமபுரி, நாகை மாவட்ட மையங்களின் சார்பில் 21.01.2021 அன்று மாலை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

■

# ஜாக்டோ-ஜியோ போராட்டத்தில் ஈடுபட்டமைக்காக ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதற்காக ரத்து செய்யப்பட்ட அரசாணை

சுருக்கம்

*பொதுப்பணிகள் - 22.1.2019 முதல் 30.1.2019 வரை நடைபெற்ற வேலை நிறுத்தப் போராட்டத்தில் பங்கேற்ற அரசுப் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்கள் மீது தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கைகள் மற்றும் குற்றவியல் வழக்குகள் - மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க அவற்றின் மீதான மேல் நடவடிக்கைகளை கைவிடுதல் - ஆணை வெளியிடப்படுகிறது.*

**பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (கே) துறை**

*அரசாணை (நிலை) எண்.9* — *நாள்: 2.2.2021*

*சார்வரி, தை-20*

*திருவள்ளுவர் ஆண்டு, 2052.*

*படிக்க:*

1. *அரசுக் கடித எண்.38148/கே1/2018-11, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (கே1) துறை, நாள் 18.1.2019.*
2. *தலைவர், தமிழ்நாடு தலைமைச் செயலகச் சங்கம், சென்னை-600 009, கடித எண்.163/ ததசெச/2019, நாள் 1.2.2021.*
3. *தலைவர், தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியம், சென்னை - 600 005, கடித நாள் 1.2.2021.*

*****

*ஆணை*

*சில அரசுப் பணியாளர் மற்றும் ஆசிரியர் சங்கங்கள் தங்களது கோரிக்கைகளை வலியுறுத்தி 22.1.2019 முதல் காலவரையற்ற வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டனர். இவ்வேலைநிறுத்தப் போராட்டத்தில் பங்கேற்ற பணியாளர்கள் மீது தமிழ்நாடு குடிமைப்பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளின் கீழ் ஒழுங்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. சாலை மறியல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள் மீது குற்றவியல் வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. இதனிடையே அரசுப் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்கள் தங்களுடைய போராட்டங்களை உடனடியாக கைவிட்டு, மக்கள் பணிக்கு திரும்ப வேண்டுமென மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க அனைவரும் போராட்டத்தை கைவிட்டு 31.1.2019 அன்றுமுதல் பணிக்கு திரும்பினர்.*

*2. இந்நிலையில் மேற்குறிப்பிட்ட வேலை நிறுத்தப் போராட்டத்தில் பங்கேற்ற அரசு பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்கள் மீது தொடரப்பட்ட ஒழுங்கு நடிகைகள் மற்றும் குற்றவியல் வழக்குகளை இரத்து செய்யுமாறு தமிழ்நாடு தலைமைச் செயலக சங்கம் மற்றும் தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியம் ஆகிய சங்கங்களின் பிரதிநிதிகள் மேலே 2 மற்றும் 3-ல் படிக்கப்பட்ட கடிதங்களின் வாயிலாக அரசுக்கு கோரிக்கை விடுத்தனர்.*

*3. அதனைத் தொடர்ந்து, 1.2.2021 அன்று வெளியிடப்பட்ட செய்தி குறிப்பில், மேற்குறிப்பிட்ட வேலை நிறுத்தப் போராட்டத்தில் கலந்து கொண்ட அரசுப் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்கள் மீது தொடரப்பட்டு, நிலுவையில் உள்ள ஒழுங்கு நடவடிக்கைகள் மற்றும் குற்றவியல் வழக்குகள் அனைத்தையும் அரசு கைவிடுவதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டது.*

*4. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேற்குறிப்பிட்ட அறிவிப்பிற்கிணங்க, பின்வருமாறு ஆணைகள் வெளியிடப்படுகின்றன:-*

(i) *22.1.2019 முதல் 30.1.2019 வரை நடைபெற்ற வேலை நிறுத்த போராட்டம் காரணமாக, அரசுப் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்கள் மீது தொடரப்பட்டு, நிலுவையில் உள்ள ஒழுங்கு நடவடிக்கைகள் அனைத்தும் உடனடியாக கைவிடப்படுகின்றன.*

(ii) 22.1.2019 முதல் 30.1.2019 வரை நடைபெற்ற வேலை நிறுத்தப் போராட்டம் காரணமாக அரசுப் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்களின் மீது மேற்கொள்ளப்பட்ட ஒழுங்கு நடவடிக்கைகளில், தண்டனை வழங்கி இறுதி ஆணைகள், வெளியிடப்பட்ட நிகழ்வுகள் எவையேனும் இருப்பின், அவை அனைத்தும் இரத்து செய்யப்படுகின்றன; மற்றும்

(iii) 22.1.2019 முதல் 30.1.2019 வரை நடைபெற்ற வேலை நிறுத்தப் போராட்டம் காரணமாக, அரசுப் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்களின் மீது தொடரப்பட்டு, நிலுவையில் உள்ள குற்றவியல் நடவடிக்கைகள் அனைத்தும் உடனடியாக கைவிடப்படுகின்றன.

5. மேலே பத்தி 4-ல் உள்ள ஆணைகளின்படி, உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட ஒழுங்கு நடவடிக்கை அலுவலர்கள் மற்றும் காவல் துறை அலுவலர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

(ஆளுநரின் ஆணைப்படி)

ராஜீவ் ரஞ்சன்
அரசு தலைமைச் செயலாளர்

2.2.2021
பிரிவு அலுவலர்
2.2.2021

---

**அரசு துணை செயலாளரிடமிருந்து நமது சங்க மாநிலத் தலைவருக்கு வந்த கடிதம்**

பணியாளர் மற்றும் நிருவாகச்
சீர்திருத்தத் (ஏ) துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை - 600 009.
சார்வதி, தை - 28
திருவள்ளுவர் ஆண்டு 2052

கடித எண்.1573/ஏ2/2021 - 1, நாள் 10.02.2021

அனுப்புநர்
திரு.பி.ஆர்.கண்ணன், பி.காம்,
அரசு துணைச் செயலாளர்

பெறுநர்
திரு.மு.அன்பரசு,
மாநிலத் தலைவர்,
தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்,
எண்.46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி,
சென்னை - 600 005.

ஐயா,

பொருள் : மனு - பதிலளித்தல் - தொடர்பாக
பார்வை : தங்களின் மனு நாள் 30.12.2020 (பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (கே) துறை மூலம் இத்துறையில் பெறப்பட்ட நாள் 19.01.2021)

-----

பார்வையில் காணும் மனுவின் மீது தங்களின் கவனம் ஈர்க்கப்படுவதுடன் அம்மனுவில் இத்துறை தொடர்புடைய கோரிக்கையான "காலத்திற்கு ஒவ்வாத அரசு ஊழியர் நடத்தை விதிகளை ரத்து செய்ய வலியுறுத்தல்" தொடர்பாக கீழ்க்கண்டவாறு பதிலளிக்கப்படுகிறது.

"தமிழ்நாடு அரசுப் பணியாளர் நடத்தை விதிகள், 1973" அவ்வப்போது திருத்தங்கள் செய்யப்படுகின்றன என்பதைத் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்ளப் பணிக்கப்பட்டுள்ளேன்.

தங்கள் உண்மையுள்ள,

அரசு துணைச் செயலாளருக்காக

## நூல் வெளியீடு



எழுத்தாளர் பெரணமல்லூர் சேகரன் கொரோனா காலத்து கம்யூனிஸ்டுகளின் களப் பணிகளை மையமாகக் கொண்டு கம்யூனிஸ்ட் ஊழியர்களின் வாழ்க்கையை செவ்வானம் என்ற பெயரில் நாவலாக எழுதியுள்ளார். இந்நாவல் வெளியீட்டு நிகழ்வு திருவண்ணாமலையில் 08.02.2021 அன்று நடைபெற்றது. மகளிர் சிந்தனை ஆசிரியர் குழுவிலுள்ள பிரமிளா வெளியிட மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் திருவண்ணாமலை மாவட்டச் செயலாளர் பெற்றுக் கொண்டார். எழுத்தாளர் பெரணமல்லூர் சேகரன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் மாநிலக் குழு உறுப்பினர் என்.பாண்டி, மாவட்ட செயற்குழு உறுப்பினர் எம். வீரபத்திரன் ஆகியோர் பங்கேற்றனர்.

## நூல் விமர்சனம்

செவ்வானம் படைத்திருக்கிறார் தோழர் பெரணமல்லூர் சேகரன்.

19 வது நூலாக... தோழரின் முதல் நாவலாக வெளி வந்திருக்கிறது 'செவ்வானம்'

எளிமையும் நேர்மையும் உயர் பண்புகளாக கொண்டவர்,

தன்முனைப்பு இன்றி..

தனக்கென ஒளிவட்டம் உருவாவதை தவிர்த்து, கூட்டுத்தலைமையை உருவாக்கி, தனித்துவ தலைமை பண்புடன் இயக்கம் நடத்தியவர்.

சொல்லுக்கும் செயலுக்கும் பேதமின்றி வாழ்வில் பயணிக்கும் ஆற்றலாளர்.

ஓய்வுக்கு பிறகு தடுமாறும் பலருக்கு மத்தியில் தடம் மாறாமல் ஏற்றுக்கொண்ட கொள்கையில் உருக்கு போன்ற உறுதியுடன் சமூக மாற்றத்திற்கான பணிகளில் தன்னை இணைத்துக் கொண்டு இடைவிடாது இயங்கி வருபவர்...

கொரனோ தீநுண்மி பரவலால் உலகமே பேரிடரில் சிக்கித் தவித்த காலத்தில் பொதுவுடமை தோழர்கள் தொடந்து மக்கள் நலப்பணிகளி?ல் ஈடுபட்டார்கள்..

எளிய மக்களுக்கு நிவாரணம் கேட்டு போராடினார்கள்..

மத்திய, மாநில அரசுகளின் நாசகர கொள்கைகளுக்கு எதிராக களமாடினார்கள்...

அத்தகைய பணிகளில் தன்னை இணைத்துக் கொண்டு இயங்கியவர் பெரணமல்லூர் சேகரன்.

இதர தோழர்களும் பேரிடர் காலத்தில் ஆற்றிய பணிகளில் கிட்டிய அனுபவங்களை, களத்தில் கண்ட காட்சிகளை, மேற்கொண்ட இயக்க நடவடிக்கைகளை...

அதன் வெற்றிகளை, படிப்பினைகளை கதையாக்கி நாவல் வடிவில் தந்திருக்கிறார்...

நாவலில் வரும் மனிதர்கள் நம்மை சுற்றி இருப்பவர்கள்..

பேரிடர் காலத்தில் அவர்கள் சந்தித்த பிரச்சனைகள் நாமும் சந்தித்தவை..

அவற்றை களைய பொதுவுடமை தோழர்கள் ஆற்றிய பணிகள் நாம் நேரில் கண்டவை...

எந் நாளும் போற்றத்தக்கவை..

வரலாற்றில் பதியப்பட வேண்டியவை...

அப்படி என்னதான் செய்தார்கள் பொதுவுடமைவாதிகள்...? விடை தருகிறது செவ்வானம்..

திருவண்ணாமலையிலிருந்து 60 கிலோமீட்டர் தொலைவில் இருப்பதாக அழகு சேனை கிராமத்தை களமாக்கி பேரிடர் காலத்தில் மானுடம் சந்தித்த சகல நெருக்கடிகளையும் அந்த கிராமத்தில் வாழும் மனிதர்களின் வாழ்க்கையுடன் தொடர்புபடுத்தி நெருக்கடிகளை களைய பொதுவுடைமை இயக்கம் மேற்கொண்ட பணிகளின் விரிவே செவ்வானம் நாவல்...

ஆம்

பேரிடர் காலத்தில் பொதுவுடைமைவாதிகள் மக்களுக்கு நிவாரணம் கேட்டு போராடினார்கள்

மறுபுறம் நிவாரணப்பொருட்களை திரட்டி மக்களுக்கு வழங்கினார்கள்..

புலம்பெயர் தொழிலாளர்களுக்கு அடைக்கலம் அளித்து பாதுகாத்தார்கள்...

தொடர்ந்து ரத்த தானம் செய்தார்கள்..

திருவண்ணாமலை மாவட்டத்தை பாதிக்கும் எட்டு வழிச் சாலை திட்டத்தை எதிர்த்து போராடி தடுத்து நிறுத்தினார்கள்..

100 நாட்கள் வேலை திட்டத்தில் தொடர்ந்து வேலை கிடைக்கவும் கூலி உரிய முறையில் கிடைக்கவும் போராடினார்கள்.. உத்தரவாதப்படுத்தினார்கள்..

உள்ளாட்சி அமைப்புகளின் செயல்பாடுகளில் பல ஊராட்சிகளில் தேவையான தலையீடு செய்து சாதிய பாகுபாடுகளை களைந்தார்கள்...

ஆணவக் கொலைக்கு எதிராக..

நீட் கொடுமைக்கு எதிராக...

புதிய கல்விக் கொள்கைக்கு எதிராக..

வேளான் சட்டங்களுக்கு எதிராக..

மக்களின் அடிப்படை தேவைகளுக்காக ..

தொழில் வாய்ப்புகளுக்காக...

சமூக நல்லிணக்கத்திற்காக...

போராடினார்கள்..

போராடினார்கள்..

போராடினார்கள்...

தங்களது பலத்திற்கும் கூடுதலாக அர்பணிப்பு உணர்வுடன் தோழர்கள் ஆற்றிய பணிகளும் நடத்திய போராட்டங்களும் அழகுசேனை கிராமத்து மனிதர்கள் வழியே செவ்வானம் நாவலில் பதிவாகி இருக்கிறது...

தோழர்கள் ரேவதி, சிவா,சங்கரன், வீராங்கன், மங்கை, செல்வி, சேட்டு உள்ளிட்ட பாத்திரங்களின் வழியே தோழர்களின் பெரும் பணியினை யதார்த்தமாக இந் நாவலில் சித்தரித்துள்ளார் பெரணமல்லூர் சேகரன்.

பிறர் நலனுக்காக தன்னை கரைத்துக் கொள்ளும் அற்புதமான மனிதர்களை நாவல் முழுவதும் காண முடிகிறது...

மகத்தான தோழர்களின் செயல்கள் மனதை நெகிழச் செய்கிறது...

அழகுசேனை கிராமம்..

தோழர்களின்

அர்ப்பணிப்புமிக்க உழைப்பினால்...

தொடர் இயக்க நடவடிக்கைகளால் பாதுகாப்பாக இருக்கிறது..

அத்தகைய தன்மையை அனைத்து கிராமங்களிலும் உருவாக்க தோழர்களால் மட்டுமே முடியும் என உறுதிப்படுத்துகிறது ‘செவ்வானம்‘ நாவல்..

தோழர் சேகரனை அறிந்த எவரும் இத் நாவலை வாசிக்கும் போது நாவலில் வரும் தோழர் சங்கரன் கதாபாத்திரத்தில் தோழர் சேகரனை அடையாளம் காண முடியும்..

யதார்த்த நடையில்..

விவரணைகளுக்காக மெனக்கெடாமல் இயல்பாக நாவலின் போக்கு இருக்கிறது...

அழகியல் குறைவு...

நாவல் எனும் வடிவில் வாசகனின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்யாமை..

அதீத நேர்மறை கண்ணோட்ட அணுகுமுறை...

சிக்கலான பிரச்சனைகளுக்கும் எளிய தீர்வுகள்/ வெற்றிகள் எனும் களயதார்த்த முரண்பாடுகள் என சில குறைகள் இருப்பினும் ...

‘என் இலக்கியத்தில்

அழகில்லை என்கிறாய்..

வாளில் அழகு தேடாதே

அதன் கூர்மையை பார்‘

எனும் கவிஞர் காசி அனந்தனின் கவிதை இந் நாவலின் மதிப்பிட்டிற்கு பொருந்தத்தக்கது...

பசிக்கு அழும் குழந்தையின் கதறலை கதறல் என சொல்வதற்கு ஒப்பனைகள் எதற்கு?

இந் நாவலில்.. பேரிடர் காலத்தில் ஊரக பகுதிகளில் அரசின் அலட்சியங்களால்..

எளிய மனிதர்கள் சந்தித்த அவலங்களை அதனை தீர்க்க தோழர் சேகரனும் இதர பொதுவுடமை தோழர்களும் ஆற்றிய பணிகளை அலங்காரம் இன்றி ஆரவாரமின்றி வெற்று அழகியலின்றி..

அழகு சேனை கிராமத்தின் வழியே உண்மையுடன் பதிவு செய்திருக்கிறார்..

விடிந்திருக்கிற செவ்வானம்..

அழகுசேனைக்கு மட்டுமல்ல,

அனைவருக்குமானது

அத்தகைய காலம் கனியும் எனும் நம்பிக்கையை வாசகனுக்குள் விதைக்கிறது தோழர் பெரணமல்லூர் சேகரனின் செவ்வானம் நாவல்...

வாசிப்போம்..

வாழ்த்துவோம்....

மா.விஜயபாஸ்கர்




நூல் : செவ்வானம்,

வெளியீடு : பாரதி புத்தகாலயம்,

பக்கங்கள் : 390,

விலை : ரூ. 370.

■

# தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்கத்தின் பெருந்திரள் முறையீடு இயக்கம் - 10.02.2021






தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்கத்தின் பெருந்திரள் முறையீடு 10 2 2021 அன்று காலை பதினொன்று முப்பது மணி அளவில் சேப்பாக்கம் விருந்தினர் மாளிகை அருகில் நடைபெற்றது பெருந்திரள் முறையீடு மாநிலத் தலைவர் ப.சுந்தரம்மாள் தலைமையில் நடைபெற்றது ஏ.பெரியசாமி மாநில செயலாளர் அனைவரையும் வரவேற்று பேசினார். தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநிலச் செயலாளர் தெ.வாசுகி பெருந்திரள் முறையீட்டு போராட்டத்தை தொடங்கி வைத்து உரையாற்றினார். ஆர்.நூர்ஜகான் பொதுச் செயலாளர் கோரிக்கை விளக்க உரை ஆற்றினார் மற்றும் பல்வேறு மாவட்ட நிர்வாகிகள் கோரிக்களை விளக்கி பேசினார்கள் சிறப்புரையாற்றினர் அந்தோணிசாமி மாவட்ட செயலாளர் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் வாழ்த்துரை வழங்கினார் காவல்துறை பேச்சுவார்த்தைக்கு அழைத்துச் செல்லும்போது பெருந்திரள் முறையீட்டை கே அண்ணாதுரை அவர்கள் தலைமையேற்று நடத்தினார் மற்றும் சத்துணவு மற்றும் சமூக நலத்துறை செயலாளர் அவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது பேச்சுவார்த்தையில் முக்கியமான கோரிக்கைகள் காலமுறை ஊதியம் வழங்க வேண்டும் ,,குடும்ப பாதுகாப்புடன் பென்சன் வழங்க வேண்டும்,, காலிப்பணியிடங்களை நிரப்ப வேண்டும்,, ஒட்டுமொத்த ஒய்வூதியம் சத்துணவு அமைப்பாளர்களுக்கு ஐந்து லட்சம்சமையலர்.உதவியாளர்களுக்கு 3 லட்சம் வழங்க வேண்டும் என்ற கோரிக்கைகளை வலியுறுத்தி பேசப்பட்டது மற்றும் முதல்வரை சந்திப்பதற்கு ஏற்பாடு செய்து தரும்படி வலியுறுத்தினோம் குறிப்பாக பென்ஷன் மட்டும் உயர்த்துவதற்கு நாங்கள் அரசுக்கு அனுப்பியுள்ளோம் மற்ற கோரிக்கைகள் சம்பந்தமாக அரசின் கொள்கை முடிவு என்று கூறினார்கள் இருந்தாலும் பென்ஷன் உயர்த்தப்படும் போது பென்சன் வழங்கப்படுகிற போ து அகவிலைப்படியை உயர்த்தி வழங்க வேண்டும் என்ற கோரிக்கையும் வைக்கப்பட்டது முதன்மைசெயலாளர் அவர்கள் இன்று இந்த கோரிக்கையை முதல்வரின் செயலாளர் அவர்களுக்கு நோட் வைக்கிறேன் என்று கூறினார்கள் இந்த அடிப்படையில்நிறைவாக பொருளாளர் அவர்கள் பி .பேயத்தேவன் அவர்கள் நன்றி கூற பெருந்திரள் முறையீடு முடிக்கப்பட்டது ■

Printed and Published by M. ANBARASU on behalf of Tamil Nadu Government Employees Association, at No.48, New No.46, Car Street, Triplicane, Chennai 600005 and Printed at Chennai Offset Printers, 19/1 & 21/2, Kithabath Khan Bhagadur Street, Ellies Road, Anna Salai, Chennai 600002, Editor: A.SELVAM. Phone: 28441286
E-mail: arasuoozhiyar@gmail.com